
பிரத்தியேக தெரிவு!



அழகிய பல டிசைன்களில்
நெய்யப்பட்ட

**கைத்தறி**

ஜவுளித் தினிசுகள்

அழகானவை
நீடித்து உழைப்பவை

மனதிற்குப்
பெருமையும்
மகிழ்ச்சியும்
கொடுப்பவை.

**கதராடையால்**
கடைத்தேறலாம்.

**ஹான்ட்லூம்ஸ்**
(Govt. of India)
7, செட்டியார் தெரு
**கொழும்பு 11**

கிளைகள்:

**அன்னை மாளிகை**
47. மெயின் வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பு வீதி, கண்டி.

**HANDLOOMS,** 7, Sea Street, COLOMBO—11

நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்
சிறந்த 'புளக்'குகள்
செய்யவேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்

**Sri Lanka Block Makers.**

*131, Messenger Street : Colombo.*



உங்கள் கண்ணைப்
பாதுகாக்க
★
இலவசமான கண்பரிசோதனை
★
அழகு மிக்க கண்ணாடி பிரேம்கள்
★

**அப்துல்லா அன் கோ**
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 486

# கையிருப்பிலிருந்து பெறலாம்

கைமார்க்கு சிமிந்தி டால்மியா சிமிந்தி

அசோகா சிமிந்தி ஒனேடா சிமிந்தி

செம்புத்தகடுகள் பித்தளைத்தகடுகள்

இரும்புத்தகடுகள்

அலுமினியம் கூரைத்தகடுகள்

கல்வனைஸ் கூரைத்தகடுகள்

கல்வனைஸ்

பிளேன் தகடுகள் ஓயர் நெட்டிங்

# செட்டிநாட் கார்ப்பரேஷன்

பிரைவேட் லிமிட்டெட்

கொழும்பு

ஆடைகளிலுள்ள
அழுக்கை அகற்றி
அழகும் தூய்மையும் உண்டாக்க
அருமையான சாதனம்!

# ரதி சோப்

ரதி நீல சோப்
ரதி பார் சோப்
ரதி வாசனைத் தைலம்

முதலியவை இங்கே தயாராகின்றன.

## சண்முகா தொழிற்சாலை

274. பருத்தித்துறை வீதி, : : நல்லூர்.






இணையாசிரியர்கள் :
சிற்பி—தமிழ்ச்செல்வன்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

கலை:4 | புரட்டாதி : 1962 | காட்சி :9

## பொருளடக்கம்

1. அன்பார்ந்த நேயர்களே
2. யாழ்நகரில் ஓர் அதிசயம்
3. சிறுகதைப்போட்டி முடிவுகள்
4. வாழ்வளிக்கும் தண்ணீர்
5, லவ்–பிறேக்
6. திருக்குறள் கீர்த்தனை
7. தக்கமுறையிலே தமிழைப் போற்றுக
8. என்னைக் கவர்ந்த எனகவிதை
9. பாசக்குரல்
10. நான் கண்ட தேவன்
11. தூதுப்பிரபந்த வளர்ச்சி
12. மாதவன்-பேட்டி
13. ஓவியமும் காவியமும்
14, பலதும் பத்தும்
15. பட் பட்
16, குமாரி சச்சு
17. நாடக விமர்சனம்
18. கலைவிழாக் கட்டுரை

# Kalaichelvi

Cheddi Kulam, Ceylon.

பாலன் வெளியீடு

# அன்பார்ந்த நேயர்களே !

வணக்கம், கலைச்செல்வி கலைவிழாமலர் அட்டையில்வெளியான மாதவன் அவர்களின் மூவர்ணப்படத்தைப் பற்றியேகலை, இலக்கிய இரசிகர்கள் இன்னமும்பேசிக்கொண்டிருக் கின்றார்கள்என்பதை எமக்குத் தினமும் வந்து குவியும் கடிதங்கள் காட்டுகின்றன. " இடை யிடையே இந்தியாவின் தலைசிறந்த ஓவியர்களின் படங்களை வெளியிட்டால் இங்குள்ள ஓவியர்கள் வளரவும் வாய்ப்புண்டு " என எழுதுகிறார் ஓவியர் ஒருவர். அடுத்த இதழில் உங்களுக்காகவே ஒருபகுதியை ஆரம்பிக்கின்றோம் "எங்கள் கலைச்செல்வி" என்றஇப்பகுதியில் உங்கள் கடிதங்கள் வெளியாகும், உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி யனுப்புங்கள்.

சென்றமாதம் 26ம் திகதி வெளியான "ஆனந்த விகடன்" இதழிலுள்ள "வணக்கம்" பகுதியைப் படித்தீர்களா ? கடந்த ஆறு ஆண்டுகளாக "ஆனந்தவிகடன்" நஷ்டத்தில் நடந்துவருவதாக ஆசிரியர் தெரிவித்துள்ளார். வாரம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் விற்பனையாகும் பத்திரிகை விகடன் பல்லாண்டு காலமாக நடந்து வருகின்றது. விளம்பர வசதி நிறைய உடையது. இப்படி இருந்தும் அது நட்டத்தில் நடைபெறுகிறதென்றால், நமது "கலைச்செல்வி" யைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா ? பத்திரிகையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது உங்கள் பொறுப்பு. உங்கள் சந்தாப் பணத்தை ஒழுங்காக அனுப்பினாலே போதும். "கலைச்செல்வியின்" தமிழ்த்தொண்டு தடையின்றி நடைபெறும். இவ்வாண்டிற்குரிய சந்தாவையும் பழைய பாக்கியையும் நவம்பர் 30ந் திகதிக்கு முன் அனுப்புபவர்களின் பெயர்கள் இலவச தென் இந்தியப் பிரயாணத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

கலைவிழா. சிறுகதைப் போட்டியின் முடிவை இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். ஒரு சில கதைகளைத் தவிர, போட்டிக்கு வந்த மற்றைய கதைகள் எல்லாம் தரத்தால் உயர்ந்து, எதிர்கால இலக்கிய உலகைப் பற்றிய நம்பிக்கையை ஊட்டும் வகையில் அமைந்துள்ளன, இப்போட்டியில் பல இளம் எழுத்தாளர்களும் கலந்துகொண்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது. பரிசுக் கதைகள் மூன்றும் அடுத்த இதழில் வெளியாகின்றன. நவம்பர் இதழ் தீபாவளியன்றே கிடைக்கும்படி ஒழுங்குகள் செய்துள்ளோம்.

சென்ற இதழில் அறிவித்ததைப் போல் புதிய தொடர்கதையையும் "முற்போக்கு இலக்கியம்" – தொடர் கட்டுரையையும் இந்த இதழில் ஆரம்பிக்கவில்லை. உண்மையான இலக்கிய அன்பர்களுக்கு ஒவ்வொருமாதமும் "கலைச்செல்வி" ஒழுங்காகக் கிடைப்பதற்குரிய வேலைகளில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். இன்னும் சில வாரங்களில் இவ்வேலை பூர்த்தியாகிவிடும். நவம்பரில் வெளியாகும் தீபாவளி சிறப்பிதழில் தொடர்கதை, தொடர்கட்டுரையுடன் வேறும் பல புதிய அம்சங்கள் ஆரம்பமாகும். இனி, அடுத்தமாதம் சந்திப்போம். வணக்கம்.

—ஆசிரியர்

# யாழ் நகரில் ஓர் அதிசயம்!

சென்ற ஆகஸ்ட் மாதம் 31ந் திகதி இரவு யாழ்-நகர சபை மண்டபத்தில் இன்ப அதிர்ச்சிதரும் ஓர் அதிசயம் நடந்தது. யாழ்ப் பாண நங்கையின் சிறந்த இன்னிசைச் செல்வர்களுள் ஒருவரான ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகர், அவர்களைக் கலைஞர்கள் அனைவரும் ஒன்றுகூடிக் கௌரவித்தார்கள்; கலைமன்றங்கள் கௌரவித்தன; பத்திரிகைகள் கௌரவித்தன; கலாரசிகர்களாகிய பொது மக்கள் கௌரவித்தார்கள்!

கலை ஒளி வீசும் யாழ்ப்பாணம் "செல்லம்ஸ்" படப்பிடிப்பு நிலையத்தினர் தமது பதின்மூன்கு ஆண்டு நிறைவையொட்டித் தேசிகர் அவர்களின் இசைக்கச்சேரியொன்றை நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள்; அருமையான பாடல்களை அமுத மழையெனப் பொழிந்த தேசிகர் அவர்கட்கு, "ஈழநாடு" ஆசிரியர் திரு. ஹரன் அவர்களைக் கொண்டு பொன்னுடை போர்த்துவித்தார்கள். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'மள மள' வென்று வந்து குவிந்தன பாராட்டுகளும் பரிசுகளும்.

யாழ் - ரஸிகர்கள் சங்கம் தங்கச் சங்கிலியும் தங்கப் பதக்கமும் அளித்தது. நாதஸ்வர வித்துவான் திரு. N. K. பத்மநாதன் பூமாலை சூட்டிப் பொன்னுடை போர்த்தார். தவில் வித்துவான் திரு. N. R. சுந்தரமூர்த்தி ஒரு தங்கப் பதக்கத்தைச் சூட்டினார். அகில இலங்கை சங்கீத வித்வத் சபை, கொக்குவில் கலாபவனம், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம். யாழ் - இசையாளர் சங்கம் ஆகியோர் பாமாலையும் பூமாலையும் சூட்டினார்கள்.

மாவை முத்தமிழ்க் கழகம், தெல்லிப்பளை இசைக் கழகம், தென்மராட்சி இசைக் கலை மன்றம், வண்ணை கலைவாணர் நாடக சபா, மிருதங்க மாணவர்கள், கலையரசு சொர்ணலிங்கம் முதலியோர் பாராட்டுரை வழங்கிப் பூமாலை சூட்ட, கொடிகாமம் தேன் தமிழ் இசைமன்றச் செயலாளர் தேசிகர் அவர்கட்கு, "தேன் தமிழ் இசைமணி" என்ற சிறப்புப் பட்டத்தை அளிக்க, அகில இலங்கை இசையாசிரியர் சங்கம் "சங்கீத வித்வத் பூஷணம்" என்ற சிறப்புப்பட்டத்தை, "செல்லம்ஸ்" நிர்வாகி மூலம் வழங்க—

வெறும் பாட்டுக் கச்சேரியுடன் தொடங்கிய விழா, பாராட்டுவிழாவாக வளர்ந்து, பதக்கஞ் சூட்டும் விழாவாக உயர்ந்து, பட்டமளிப்பு விழாவாக நிறைவு பெற்றது.

வித்வத் காய்ச்சலினால் வீண் சண்டைகளில் ஈடுபட்டிருப் பவர்கள் எனக் குற்றம் சாட்டப்படும் கலைஞர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, தரமான கலைஞர் ஒருவரை இப்படிப் பாராட்டியதை அதிசயம் என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்வது?

—சிற்பி




## பரிசு 100 - ரூபா

# சிறுகதைப் போட்டி

வவுனியாவில் நடைபெற்ற கலைச்செல்வி கலைவிழாவை ஒட்டி நாம் நடாத்திய சிறுகதைப் போட்டிக்கு இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து ஐம்பது சிறுகதைகள் வந்தன, மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்தபின் கீழ்க்கண்ட கதைகளைப் பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

முதலாவது பரிசு : 50 - ரூபா

இதயக் குமுறல் : எழுதியவர் : செம்பியன் செல்வன்
ஆ. ராஜகோபால்
விஜயவர்த்தன விடுதி,
பல்கலைக் கழகம், பேராதனை.

இரண்டாவது பரிசு : 30 - ரூபா

மெழுகு வர்த்தி : எழுதியவர் : யோ. பெனடிக்ற் பாலன்
9, மருதடி வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

மூன்றாவது பரிசு : 20 – ரூபா

ரிவொலூஷன் : எழுதியவர் : எம். எம். மக்கீன்
16, மொகிதீன் மஸ்ஜித் லேன்.
மருதானை, கொழும்பு.

பின்வரும் நான்கு கதைகளையும் எழுதியோர்க்குப் பாராட்டுப் பத்திரம் கொடுக்கப்படுகின்றது.

1. "பெரியக்கா"
வி. சிங்காரவேலன்,
தகவற் பகுதி
வருமானவரி இலாகா
த. பெ. எண் 515
கொழும்பு.

2. "உச்சிப் பொழுது"
செங்கை ஆழியான்,
க. குணராசா
மார்க்கஸ் பர்ணாந்துவிடுதி
பல்கலைக் கழகம்
பேராதனை.

3. "தவறு"
நாவேந்தன்,
மெமோறியல் கல்லூரி
மானிப்பாய்

4. "குருட்டுச் சிலை"
'தீவான்' மு. பொன்னம்பலம்
126, நெடுந்தெரு. இரத்தினபுரி

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் பேரவையில் பரிசுகள் வழங்கப்படும். போட்டியில் பங்கு பற்றிய அனைவர்க்கும் நன்றி.

—ஆசிரியர்

# வாழ்வளிக்கும் தண்ணீர்

அ. க. சர்மா

[ சென்றமாத 47-ம் பக்கத் தொடர்ச்சி. ]

தண்ணீர்தான் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமானது! தண்ணீர் இல்லாவிட்டால் வாழ்வில்லை. நாகரிகமில்லை, என்றெல்லாம் சென்ற கட்டுரையில் கண்டுகொண்டோமல்லவா? நமது உடலில் பெரும் பகுதி நீராலாக்கப்பட்டதே. திரவ உருவில் உள்ள இரத்தத்திலும் நீர் உள்ளது. நீர் இல்லாவிட்டால், இரத்தம் உறைந்து உயிர் பறந்துவிடும். விலங்குகள், தாவரங்கள் ஆகிய உயிர்வாழ்வன வெல்லாமே நீரின்றி உயிர்வாழா. இத்துணைச் சிறப்பு வாய்ந்தது நீர். சில இடங்களில் பெறப்படும் நீர், சுவையுள்ளதாகவும், சில இடங்களில் பெறப்படும் நீர் சுவையற்றதாகவும், இருப்பதை நாம் காண்கின்றோமல்லவா? இப்படி மாறுபட்ட 'தன்மையுடன்" நீர் காணப்படுவதன் காரணங்களை ஆராய்வோம்.

இயற்கை நமக்களிக்கும் வரப்பிரசாதம் மழை. மழைபொழியும் பொழுது ஆகாயத்தில் உள்ள கரியமில வாயு, நைதரசன் ஒட்சைட்டுக்கள் ஆகியன கரைகின்றன. இடி முழக்கத்துடன் மழை பெய்யும் பொழுது, அம்மழை நீரைச் சேகரித்து வைத்தால் அது கருமஞ்சள் நிறமாக இருப்பதைக் காணலாம். மின்னல் நிகழும் பொழுது மின் சக்தி வெளிப்படுகின்றது. இம் மின் சக்தியினால் காற்றில் உள்ள நைதரசனும், ஒட்சிசனும் கூடுகின்றன. இதன் விளைவாக நைதரசன் ஒட்சைட்டுக்கள் தோன்றுகின்றன, இவை நீரில் கரைவதால் நீர் மஞ்சள் நிறமாகின்றது. இவ்வொட்சைட்டுக்கள் நீரில் கரைந்து, நைத்திரிக்கமிலத்தைப் பிறப்பிக்கின்றன. மஞ்சள் நிறத்தை மழை நீருக்களிப்பது நைத்திரிக்கமிலமே. மேலும் கரியமிலவாயு மழை நீரில் ஓரளவு கரைந்து காபோனிக்கமிலத்தை உண்டாக்குகின்றது.

மழை நீரில் உள்ள இவ்வமிலங்கள் மழை நீருடன் பூமியினுட் புறம் செல்லுகின்றன. பல அடுக்குகளினூடாக மழைநீர் வடிந்து செல்லும் போது பூமியில் உள்ள சுண்ணாம்புக் கல்லுடன் செயல்பட்டு, "கல்சியம் பைக்காபனேற்று" - (Calcium bi-carbonate) என்ற பொருளை உண்டாக்குகின்றது. இது நீரிற்கரையும் இயல்புள்ளது; எனவே நீருடன் இப்பொருளும் கரைந்து, மறைந்து செல்லுகின்றது. சென்று பூமியினடியில், நீருடன் இரண்டறக் கலந்து நிற்கின்றது. கல்சியங் குளோரைட்டு போன்றவையும் சிலவகை நீரில் உள்ளன. கல்சிய உப்புக்கள் கரைந்திருப்பதால் நீர் தனது இயல்பை இழந்து, அவ்வுப்புக்களின் பண்புகளைப் பிரதிபலிக்கின்றது.

சாதாரண நீர் நிறமற்றது, மணமற்றது; உருசியற்றது. நீருக்குச் சுவையளிக்க அதில் கரைந்துள்ள

உலோக உப்புக்கள் உதவுகின்றன. கரைந்திருக்கும் காற்றும் நீரிற்கு ஓரளவு சுவையளிக்கின்றது. கொதிக்கவைத்து ஆறியநீரைப் பருகுவதற்கும் சாதாரண தண்ணீரை அருந்துவதற்கும் உள்ள "சுவை" வேறுபாட்டை யாவரும் அறிவர். கரைந்துள்ள வாயு வெளியேற, திடப்பொருளாக உப்புக்கள் கீழேதங்க கொதிக்கவைத்துப் பின் குளிரவிடப்பட்ட நீர் சுவையற்றதாகின்றது. நீரிற்குச் சுவையை அளிப்பது மாத்திரமன்றி உடலின் உறுதியான வளர்ச்சிக்கும் இந்தக் கல்சியவுப்புக்கள் பெரிதும் உதவுகின்றன.

நம்மிடையே "சோப்பு" உபயோகிக்கும் பழக்கம் பலவாகப் பரவி விரவி நிற்கின்றது. சில கிணற்று நீர்களுடன் சோப்பு நன்கு நுரை தருகின்றது. சிலவற்றுடன் நுரை கிடைப்பது எளிதன்று. எனவே சோப்புடன் நுரைதரும் நீரை ஒருவகையாகவும், நுரைதராது சோப்புச் செலவாகி, 'திரை' தரும் நீரை ஒருவகையாகவும் பிரிக்கலாமல்லவா? சோப்புடன் எளிதில் நுரைதரும் நீரை மென்-நீர் எனவும், திரை தரும் நீரை வன்-நீர் எனவும் அழைப்பர். நீரில் கல்சியவுப்புக்கள் கரைந்திருப்பதாலேயே, சோப்புடன் நுரைதரும் இயல்பு வேறுபடுகின்றது.

வன்னீரிலும் இருவகை உண்டு; கொதிக்கவைப்பதால் போக்கிவிடக் கூடியது ஒருவகை. இவ்வகை நிலையில் வன்னீர் எனப்படும். கொதிக்கவைப்பதால் போக்கிவிட முடியாதது மறுவகை. இவ்வகை நிலையுள் வன்னீர் எனப்படும். நாம் பெறும் "உவர்ப்பு" நீரைக் கொதிகலனில் கொதிக்க வைக்கும்போது, அதனடியில், வெண்மையான ஒரு பொருள் படிவதைக் காண்கிறோம். இது சீமேந்துபோன்று உறுதியானது. இப்பொருளின் பெயர் "கல்சியங் காபனேற்று" (Calcium Carbonate) எனப்படும். நிலையில் வன்னீருக்குக் காரணமான கல்சியம்-பை-காபனேற்று வெப்பத்தினால் சிதையும்பொழுது இது உண்டாகின்றது.

இக்கடினமான பொருள் வெப்பத்தை எளிதிற் கடத்தாதலின் அதைப் படிவாகக்கொண்டுள்ள கொதிகலன்களில் நீரைக் கொதிக்கச் செய்வதற்குச் செலவும் நேரமும் அதிகமாகின்றன. மேலும் இப் படிவுத் துணிக்கைகள் உடலினுட்சென்றுவிட்டாலோவெனில் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. தொல்லைதரும் பொருளாகவன்றோ இது இருக்கின்றது. நீரிலிருந்து இதைப்போக்கப் பலவழிகள் உள்ளன. நிலையில் வன்னீருடன் வேண்டிய அளவு கணக்கிடப்பட்ட சுண்ணம்புநீரைக் கலந்து கொதிக்கவைத்தால் இப்பொருள் நீங்கி, நீர் சுத்தமாகிவிடும். இதைத் தவிர செயோலைற்று (Zeolite) முறை என்றொரு முறையும் வழக்கில் உள்ளது. அதைப் பின்னர் ஆராய்வோம்.

நிலையுள் வன்னீரைக் கொதிக்க வைப்பதால் அதை மென்னீராக்க முடியாது. அதிலே கல்சியங் குளோரைட்டுக் கரைந்துள்ளது. அதைப் போக்கவும் பல முறைகள் உள்ளன. சோடாவென அழைக்கப்படும் சோடியங் காபனேற்றை வேண்டிய அளவிற்கு அந்நீரில் கரைத்துச் சூடாக்கினால் நீர் பருகுவதற்குகந்ததாகவும் சோப்புடன் நுரைதரும் இயல்புள்ளதாகவும் மாறும். செயோலைற்று முறையும் இதற்கு உபயோகமான

ஒன்றே. செயோலைற்று என்று ஓர் இரசாயனப்பொருள் உள்ளது. இதை ஒரு வடிகட்டும் பாத்திரத்துள் வைத்து அதனூடு நீரைச் செலுத்தினல், அந்நீர் நிலையுள் வன்னீராயினும்: அல்லது நிலையில் வன்னீராயினும் சரி, கரைந்துள்ள கல்சியவுப்புக்கள் இலகுவாக நீக்கப்பட்டுவிடுகின்றன.

கல்சியவுப்புக்கள், சோடியவுப்புக்கள் நீரில் கரைந்து நீரின் சுவையையே மாற்றிவிடுகின்றனவெனக் கண்டோம். எனவே கிணற்றிற்கு நிலம் வகுக்கையில், மண்ணின் தன்மையை அனுசரித்தே வகுக்கவேண்டும். சுண்ணும்பு நிறைந்த பிரதேசமாயின் வன்னீரே கிடைக்கும். கரைந்திருக்கும் உப்புக்களின் அளவைப் பொறுத்தே நீரின் சுவையிருக்கும் உவர்மண் நிலமாயின் நீர் சோடியவுப்புக்களைக்கொண்டுள்ளதாய் ''உப்பாயிருக்கும்''. பெரும்பாலும் பெருமழைக்குப்பின்னரே தண்ணீரின் தன்மை மாறுகின்றது. உப்புநீரைத் தரும் சில கிணறுகள் பெருமழைக்குப்பின் நல்ல நீரையும், 'நல்ல' நீரைத்தரும் சில கிணறுகள் உப்பு நீரையும் தருவதை நாம் ஒவ்வொரு மழைக்காலத்தின் பின்பும் கண்டிருக்கின்ருேம். சுண்ணும்புப் பாங்கான பூமியில் உள்ள கிணறுகளில்: மழைநீர் கல்சியவுப்புக்களை அதிகமாகக் கரைத்து: முன்பே நல்லநீராக இருந்ததுடன் கலக்கும்போது நீரின் தன்மை மாறுபடுகின்றது. கோடை வெப்பத்தில் நீரின்மட்டம் குறைந்திருக்கும்பொழுது, அதிக அளவு கல்சியவுப்புக்களைக்கொண்டு உப்பு நீரையளித்த கிணறு, மழைநீரைப் பெருமளவிற் பெறும்போது கரைந்துள்ள உப்புக்கள் விகிதத்தில் குறைந்துள்ளதால் நல்ல நீரைத் தருகின்றது. இதுவே-நீர் உப்பாகும், அல்லது உப்புமாறும் சூட்சுமமாகும்

இயற்கையின் லீலைகளுக்கு எல்லையே கிடையாது. சில இடங்களில் தானகவே பூமியிலிருந்து சீறிப்பாயும் தான்தோன்றி ஊற்றுக்கள் உண்டு. இந்நீரில் தாது உப்புக்கள் கரைந்திருக்கும். இத்தகைய நீர் பல வியாதிகளைப் போக்கும் தன்மையது. தென் இந்தியாவில், நெய்வேலி என்னும் இடத்தில் காணப்படும் நீரில் கந்தகச் சத்துள்ளது. சர்மவியாதிக்கு மிகவும் ஏற்றது இந்நீர். ஐரோப்பாவில் 'தஸ்கனி' என்ற ஊரில் உள்ள ஊற்றுக்கள்: பல தீர்க்கமுடியாது எனக் கைவிடப்பட்ட வியாதிகளைப் போக்கியுள்ளதாக அறிகின்ருேம். நமது நாட்டில் கிழக்குமாகாணத்தில், திருகோணமலையில் உள்ள வென்னீர் ஊற்றுக்களும் நலிவுற்ற உடலுக்கு நலம் விளைவிக்கவல்ல தாது உப்புக்களைக்கொண்டுள்ளன. இப்படி நீரின் சிறப்பைக் கூறிக்கொண்டே போனல் நீண்டுவிடும். நீரின் சிறப்பை அறிந்துதானே என்னவோ நம் முன்னேர் எல்லாம் வல்ல இறைவனை "கங்கையைச் சடையில் வைத்து நீரைத் தலைசிறந்ததாக உலகிற்கோதும் கருணமூர்த்தியாக" உருவகப்படுத்தினர்கள்.

ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!

சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

நவீன சேமிப்பிற் சேருங்கள்

| மாதவீதம் கட்டுவது | இலாபத்துடன் கொடுக்கும் தொகை 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
|---|---|---|---|
| 10 ரூபா | 330 ரூபா | 750 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

மேற்குறித்த இலாபத்துடன்
ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு
அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால பங்கும் கொடுக்கப்படும்.

மறுவிபரத்திற்கு:

## இலங்கா நிதி லிமிற்றெட்

தலைமைக்கந்தோர்:

**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

கிளை;

*284, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை*

# லவ் - பிறேக்

—குகன்—

சோமச்சந்தருக்கு நீர்கொழும்பில் வேலை. நுனகாவிலுள்ள அவன் வீட்டிலிருந்து நீர்கொழும்புக்குத்தினமும் பஸ்ஸில் போய் வந்து கொண்டிருந்தான். அதே ஊரிலிருந்து அதே பஸ்ஸில் ஒரு அழகிய யுவதியும் வந்து கொண்டிருந்தாள். இருவரும் தினமும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றார்கள் ஆனால் பேசியதில்லை. சோமச்சந்தருக்கு அவளுடன் பேசினால் என்ன!என்ற ஆவல் சில சமயம் தோன்றும், ஆனால் அதற்கேற்ற மனத் தைரியம் இல்லை. அவன் பார்வை அவன் கையிலுள்ள தங்கச் சங்கிலியோடு கூடிய கடிகாரத்திற்குப் பாயும். சில சமயம் தனது "பிறமிட்" கைக் குட்டையை எடுத்து முகம் கழுத்து முதலியவைகளை துடைப்பான். துடைக்கும் பொழுது தவறுதலாக அவன் போட்டிருக்கும் தங்கச்சங்கிலி வெளியே வந்துவிடும் வெகு அலட்சியமாக அதை உள்ளே தள்ளிவிடுவான். அவன் முன்பெல்லாம் சிகரெட் குடிப்பதில்லை. இப்பொழுதோ, எப்பொழுதும் அவன் பையில் அழகிய சிகரெட் கேஸ் ஒன்றும் சிகரெட் லயிற்றர் ஒன்றும் இருக்கும். வெகு அலட்சியமாக சிகரெட்டை எடுத்து இரண்டுதரம் கேசில் தட்டிவிட்டு நுனி உதட்டில் வைத்துப் பற்ற வைப்பான். பற்ற வைத்ததும் புகைவண்டிக்குப் புகை வந்தது போல, வாயாலும் மூக்காலும் குபு குபுவென்று புகைவரும். உதட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து வெகு அலட்சியமாகச் சாம்பரைத் தட்டுவான். இதை அவன் இப்படிச்செய்யு முன் எத்தனை நாள் எத்தனை தடவை வீட்டில் கண்ணாடிக்குமுன் செய்ய வேண்டியதாயிருந்தது! பாவம், சிகரட் குடிப்பதே ஒரு நாகரிகம் என

இம்மாதம் அறிமுகமாகும் புதிய எழுத்தாளர் குகன் நெல்லியடி அரசினர் கல்லூரி ஆசிரியர். B. Sc. பட்டதாரி. "கண்கள்" இதழில் இவர் எழுதிய "காதல் செய்யும் விலங்கினங்கள்" என்ற கட்டுரை "முத்தாரம்" இதழில் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

அவளை நோக்கிப் போவான் பேச வேண்டும் என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு. ஆனால் இரண்டு மூன்று அடி எடுத்து வைத்ததும் அவன் தைரியம் இடக்குச் செய்ய ஆரம்பித்துவிடும். வெற்றிகரமாகப் பின்வாங்குவான், ராஜ நடையோடு. சிலசமயம் அவளை உற்றுநோக்குவான். ஆனால் அவள் சட்டென்று திரும்பி இவனைப்பார்த்தால், இவன் பஸ் வருவதை எதிர் பார்த்து அந்தப் பக்கம் பார்த்தது போல நடிப்பான். சில சமயங்களில் இவன் பார்க்கும் திசையும், பஸ் வரும திசையும் வேறாக இருப்பதுமுண்டு. உடனே

## திருக்குறள் கீர்த்தனை - 4

### குறள்

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இராகம் - காபி

தாளம் - ஆதி

### பல்லவி

தனக்குவமை இல்லாத் தனிப்பெரும் இறைவனின்
தாளதைச் சேர்ந்திடுவாய் - மனமே

### அனுபல்லவி

மனக்கவலையெல்லாம் மாயமாய் மறைந்திடும்
தினத்திற்கொருதரமாகிலும் தெய்வீகம்

### சரணம்

அருளது கிடைக்கும் அவன் பாதம் நாடு
பொருளதுணர்ந்து நிதம் போற்றியே பாடு
பெருமானவன் அருள் பெற்றவர்க்கல்லால்
வருமனக் கவலைகள் மாற்றிடல் அரிதாம்.

—யாழ்ப்பாணம் ந. வீரமணி

---

அவன் நினைத்துவிட்டான். சிகரெட்டைத் தான் கையில் வைத்திருக்கும் முறையைக்கொண்டே தன்னைப்பற்றி மற்றவர்கள் அறியலாம் என்று நினைத்தான்: அதனால் என்னமுறையில் தான் சிகரெட்டை வைத்திருக்கவேண்டும் என்பதைப்பற்றி எத்தனையோ நாட்கள் ஆராய்ச்சிசெய்து தனது மூளையைச் செலவுசெய்து ஒருமுடிவுக்கு வந்திருந்தான். சிகரெட்டை இடது கையிற்றான் எப்பொழுதும் வைத்திருக்கவேண்டும். சுட்டுவிரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் விரல் நுனியில் இல்லாமல் கொஞ்சம் பின்னாலே வைத்திருக்கவேண்டும். சிகரெட்டை வாயில்வைத்துப் புகையை உள்ளே இழுக்கும்பொழுது எதைப் பற்றியோ சிந்திப்பதைப்போல முகம் மாறவேண்டும். அதைப் பார்த்துத் தான் ஒரு சிந்தனையாளன் என்று அவள் எண்ணவேண்டும். இப்படியே அவன் நினைத்ததும் செய்ததும் எவ்வளவோ. "பெண்களை வசீகரிப்பது எப்படி?" என்று அதில் தேர

ல்விகண்ட எத்தனையோபேர் எழுதிய எத்தனையோ புத்தகங்களை எல்லாம் படித்து அதில் உள்ளபடி ஒரு அணுவளவும் பிசகாது நடப்பான். ஆனால் அப்பெண் இவை எல்லாவற்றையும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவள் கவனம் முழுவதும் பஸ் எப்பொழுதுவரும் என்பதிற்றான் இலயித்திருக்கும். கண்களும் பஸ்வரும் பக்கத்தைத்தான் நோக்கும்.

அவர்கள் போவது 7-30 மணி பஸ்ஸில். பஸ் சிலசமயம் முந்தும் பிந்தும். இவர்களுக்குச் சிலசமயம் உட்காருவதற்கு இடம் கிடைக்கும். சிலசமயம் நின்றுபோகவேண்டி இருக்கும். சிலசமயம் ஒருவருக்கு மாத்திரம் இடம கிடைக்கும. அப்பொழுது எல்லாம் தான் உட்காராது அவளுக்கு அந்த இடத்தைத் தானம்கொடுப்பான் அவன்.

அன்று சனிக்கிழமை. பஸ்சில் ஒரே கூட்டம். இருவரும் நெருக்கியடித்துக்கொண்டு நின்றார்கள். விரைவாகச் சென்றுகொண்டிருக்கும் பஸ் அதே விரைவோடு திரும்பும். திருப்பங்களில் விழுந்து விடுவேனோ என்ற பயத்தில் அவள் அவனைச் சில சமயங்களில் ஒரு கையால் பிடிப்பாள் அவனும் இதுதான் சமயம் என்று அவளை அணைத்துப் பிடித்துக்கொள்வான். உடனே தன்னை விடுவித்துக் கொள்வாள். இப்படியே அன்று நீர்கொழும்பைச் சென்று அடைந்தார்கள். மறுநாள் ஞாயிறு—லீவு. திங்களன்று வழக்கம்போல் இருவரும் வந்திருந்நார்கள் பஸ் நிற்குமிடத்திற்கு. ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. பஸ் வந்தது. இருவரும் ஏறினார்கள். இருக்க இடமில்லை. இருவரும் நின்றார்கள். அவள் சிலஅடிகள் பின்னால் சென்று நின்றாள். இவனோடு நிற்க விருப்பமில்லைப் போலும். இவனுக்கோ சனிக்கிழமையைப்போல இன்னும் கூட்டம் வந்தாலென்ன என்று இருந்தது. பஸ்விரைந்து சென்று கொண்டிருந்தது. ஒரு முடக்கில் திடீரென்று ஒருவர் கையைக் காட்டினார் பஸ்ஸை நிறுத்தும்படி. சடாரென்று பிறேக்கைப் போட்டான் பஸ் சாரதி. பஸ்சில் இருந்தவர்களை 'யெல்லாம் ஒரு குலுக்குக் குலுக்கிற்று அவளால் நிலையைச் சமாளிக்க முடியவில்லை, முன்னுக்குத் தள்ளப்பட்டவள் அவனைப் பிடித்துக்கொண்டுதான் நிற்க முடிந்தது, பயத்தில் அவனை இறுகக் கட்டிப் பிடித்து விட்டாள் அவனும் அவளை அணைத்துப் பிடித்துக்கொண்டான். சுயநிலையை அடைந்ததும் சூழ்நிலையை உணர்ந்துகொண்டாள். அவளுக்கு வெட்கத்தால் முகமெல்லாம் சிவந்துவிட்டது யினும் அவன்பிடியிலிருந்து திமிற முடியவில்லை, அவனே பிடியைத் தளர்த்தினான், அவளும் அவனுக்கு அருகிலேயே நின்றாள். அவனை நிமிர்ந்து பார்த்து நன்றியுணர்ச்சியோடு புன்முறுவல் பூத்தாள், அவனும் சிரித்தான், அவனுக்கோ பஸ்சில் போவது போலில்லை. எங்கோ அண்ட வெளியில் இருவரும் பறந்து செல்வது போன்ற உணர்ச்சி.

செவ்வாய்க்கிழமை இருவரும் பஸ் நிற்குமிடத்திற்கு வந்திருந்தார்கள். அவளைக் கண்டதும் அவன் அவளிடம் சென்று நல்லகாலம் நேற்று நான் இல்லாதிருந்தால் என்ன நேர்ந்திருக்குமோ? என்றான் அவளும் “நீங்கள் இல்லாதிருந்தால் நான் ஒருசமயம் இந்த உலகத்திலிருந்தே விடைபெற்றிருப்பேன்.

நீங்கள் செய்த உதவியை நான் இனி என்றென்றும் மறக்கமாட்டேன்' உங்களுடைய பெயர் என்ன? என் பெயர் பிரேமலதா" என்ருள்.

"என் பெயர் சோமச்சந்தர். பொலீஸ் ஸ்டேசனுக்குப் பின்னல் ஒருவீடு வாடகைக்கு எடுத்து இருக்கின்றேன். நான் ஒருவன்தான் அங்கு இருக்கின்றேன். உங்கள் வீடு எங்கே?" என்று கேட்டான்.

"என்வீடு அ. மு. சொ. க. அப்துல் காதரின் மகன் அ. மு. சொ. க. அ. கா. இஸ்மெயிலின் கடைக்குப் பக்கத்தில். அங்கு நானும் சிநேகிதி ஒருவளும் இருக்கின்ருேம்." என்ருள்.

பஸ் வந்துவிட்டபடியால் தங்களது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். அன்று பஸ்ஸில் நிறைய இடம் இருந்ததும் இருவரும் ஒரு ஆசனத்தில் இருந்தார்கள். இருவர் உடலும் அருகில் இருந்தது. இருவர் மனமும் ஒருவரை ஒருவர் நாடியது.

பின் பலமுறை சந்தித்தார்கள். அவனின் வீடுவசதியாக இருந்ததால் அங்குதான் சந்திப்பார்கள். இப்படியே சிலமாதங்கள் ஓடியது. அவள் கலியாணப்பேச்சை ஆரம்பித்தாள். அவனுக்கு ஏனே அது பிடிக்கவில்லை. "பிரேமா! நாம் கலியாணம் செய்துகொண்டால் இருவரும் ஒரு இடத்தில் வசிப்போமல்லவா? அதனல் எங்கள் அன்பு குறைந்துவிடும். பயமில்லாது நாம் ஒருவரை ஒருவர் சேருவதால் இன்பம் இருக்காது. இப்பொழுதுதான் எவ்வளவு இன்பம். நாம் சந்திப்பதை யாராவது பார்த்துவிடுவார்களா? என்ற பயத்தோடு சந்திப்பதாற்ருன் எவ்வளவு ஆனந்தம். சிலசமயம் சந்திக்க முடியாவிட்டால் எவ்வளவு ஏக்கம். பின் சந்தித்தவுடன் இரட்டிப்பு மகிழ்ச்சி. எப்பொழுதும் எந்நேரமும் ஒருவரை ஒருவர் எதிர்பார்க்கிருேமல்லவா? இவையெல்லாம் நாம் மணம்செய்துகொண்டால் ஏது? வீட்டிற்கிடைக்கும் மாம்பழத்திற்ருன் ருசி ஏது. ஆனல் தெருவோடு போய்க்கொண்டிருக்கும்போது தென்படும் தோட்டத்திலே மாமரம் இருந்து அதில் காய்களும் இருந்தால் தோட்டக்காரனுக்குத் தெரியாமல் அக்காய்களைப் பறித்துத் தின்பதிற்ருன் எவ்வளவு ருசி; எவ்வளவு ஆனந்தம். தோட்டக்காரன் வந்துவிடுவானே என்றபயத்தில் அவசரம், அவசரமாகச் சாப்பிடுவதிற்ருன் கொள்ளை கொள்ளை இன்பம் பிரேமா"

கலியாணம் வேண்டாமென்று அவன் சொன்னதும் அவள் கண் கலங்கினள், உடனே அவன் பிரேமா, உனக்குக் கல்யாணம் செய்வதில் ஆர்வமிருந்தால் செய்துவிடுவோம் இப்போது சிரி பார்க்கலாம். எங்கே இன்னும் கொஞ்சம் லேசாகச் சிரி; என் கண்ணல்ல.' அவள் சிரித்தபடி ஓடிச்சென்று அவன் மடியிலே வீழ்ந்தாள். பயமும் ஏக்கமும் மகிழ்ச்சியும் கலந்த சந்திப்புக்களில் அவர்கள் தங்களை மறந்திருக்க வருடமொன்று ஓடிவிட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வழவழக்கம்போலச் சந்தித்தார்கள். பேச்சுவாக்கில் அவள் "உங்களுக்கு ஒரு சந்தோஷ சமாச்சாரம். ஆனல் சொல்லமாட்டேன்" என்ருள்.

"சொல்லு கண்ணே என் அன்பல்ல.

'சரி. சொன்னல் என்ன பரிசு கொடுப்பீர்கள்?

"ஆயிரம் முத்தங்கள் கொடுப்பேன்."

"அடேயப்பா! ஆயிரம் முத்தங்களா? எப்படிக் கொடுப்பீர்களாம்?"

"அதெல்லாம் ஏன் உனக்கு. நீ கதையைச் சொல்லு. பின் நடக்கின்றதைப்பார். இதோ அச்சாரமாக......... பத்து".

"எங்கள் அன்பின் சின்னமாக, காதலின் உருவமாக ஒரு தங்கச் சிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது."

"எங்கே பிரேமா, எந்தத் தட்டானிடம் கொடுத்திருக்கின்ருய்? என்ன உருவம் செய்யச்சொல்லியிருக்கின்ருய்? கிருஷ்ண ஆசாரி நன்ருக உருவங்கள் செய்வானும்."

"இல்லை, யாரிடமும் கொடுக்கவில்லை. உங்களின் உதவியால் நானேதான் செய்துகொண்டிருக்கின்றேன். பத்துமாதம் செல்லும் சிலை செய்துமுடிக்க. இப்பொழுது மூன்று.........".

"என்ன சொன்ணுய்? அவன் குரலில் ஒரு பதட்டம். "இன்னும் ஆறுமாதத்தில் எங்கள் அன்பின் அடையாளமாக ஒரு குழந்தை பிறக்கப்போகின்றது. குழந்தை பிறந்ததும் என்னை மறந்துவிடாதீர்கள். நானும் உங்கள் குழந்தைதானே."

சோமச்சந்தருக்கு உடலெல்லாம் நடுங்கிற்று. எங்கே தன்குட்டு உலகுக்கு வெளிப்பட்டுவிடுமோ என்று பயந்தான். அவளை நோக்கிப் 'பிரேமா நான் உன்னை என் உயிர்போல நேசிக்கின்றேன். எங்கள் இருவருக்குமிடையில் யார் வந்தாலும் என்னல் பொறுக்கமுடியாது. நான் உனக்கு; நீ எனக்கு. இப்போதைக்கு அதுதான் தேவை. ஆதலால் வளருமுன் அந்தப்பயிரை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடு."

"என்ன சொல்கின்றீர்கள்?"

"பயிரை அழித்துவிடு என்கிறேன்."

"முடியவே முடியாது. என் வயிற்றில் வளரும் பயிரை நானே அழிப்பதா? மாட்டேன். இதோ பாருங்கள், இப்பொழுதெல்லாம் இப்படித்தான் சொல்வீர்கள். ஆனல் குழந்தை பிறந்ததும் மாறிவிடுவீர்கள். குழந்தையைக் கொஞ்சுவதிலேயே நேரம்போக்குவீர்கள். என்னையே மறந்துவிடுவீர்கள்" என்ருள்.

சோமச்சந்தரின் மூளை தீவிரமாக வேலைசெய்தது. ஒரு முடிவும் கண்டான். அவளைநோக்கிப் "பிரேமா! எங்கள் கலியாணத்தை அடுத்த மாதம்வைக்கலாமென்றிருக்க நீ ஒரு வெடிகுண்டைத் தூக்கிப்போடுகின்ருயே. கலியாணம்செய்த நாலாவது மாதமே குழந்தை பிறந்தால் நாலு பேர் எங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள். வெளியேதான் தலைகாட்ட முடியுமா? அதனல் நான் சொல்வதைக்கேள். சிசுவை அழித்துவிடு அதில் ஒருபாவமுமில்லை. கலியாணம் செய்துகொண்டபின் எவ்வளவு குழந்தைவேண்டுமென்ருலும் பெற்றுக்கொள். இப்பொழுது இது எங்களுக்குவேண்டாம்" என்று எவ்வளவோ எடுத்துரைத்தான். அவளை இணங்கச்செய்வது பெரும்பாடாகப் போய்விட்டது அவனுக்கு.

அவன் பேச்சை நம்பிய அவள் அவன் சொன்னகாரியத்தை ஒப்புக் கொண்டாள். இதனால் தனக்கு என்ன கெடுதல் நேருமோ என்று சிறிதளவேனும் சிந்தித்துப் பார்க்க வில்லை. சிசுவை அழிப்பதற்கு ஒரு நாட்டுவைத்தியனின் உதவியை நாடினார்கள். வைத்தியன் கொடுத்த பச்சிலை மருந்துகளையெல்லாம் விழுங்கினாள். மிகவும் கஷ்டப்பட்டுச் சிசுவை அழித்தார்கள். ஆனால் அவள் உடலுக்கு ஏற்பட்ட வருத்தம் அவள் உருவத்தை மாற்றிக்கொண்டு மறியது: அழகுசொட்டும் யுவதியாயிருந்தவள் இப்போது நசுங்கிய பொற்குடம்போலானாள். முகத்திலே முன்பிருந்த கவர்ச்சிகளில்லை. கிழம் தட்டியது. இந்த மாற்றங்களைக் கண்ட அவனுக்குப் பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. இருந்தும் தான் தப்பிவிட்டதாக எண்ணினான்.

அன்று பிரேமா சோமச்சந்தரைப் பார்ப்பதற்கு வந்திருந்தாள். மீண்டும் அதே கலியாணப்பேச்சு. வெளியே ஒரு சிறுவன் ஒரு ரோஜா மலரைக் கையில் வைத்துக்கொண்டு இதழிதழாகப் பிய்த்து எறிந்துகொண்டே இருந்தான். அதைக்கண்ணுற்ற சோமச்சந்தர் "பிரேமா அதோபார் அந்தப் பையனின் கையில் உள்ள ரோஜாமலர் எவ்வளவு அழகாயிருக்கின்றது. நீயும் இப்படித்தான் பூத்துக் குலுங்கும் மலர் போல் இருந்தாய். எவ்வளவு அழகு அந்தமலர். பார்ப்பவர்கள் எல்லோருக்கும் அதை அடையவேணடும், முகர்ந்துபார்க்கவேண்டும் என்ற ஆசை ஏற்படும். அந்தப் பையன் என்ன செய்கின்றான் பார். இதழ் இதழாகப் பிய்த்து எறிந்துகொண்டே இருக்கின்றான். இப்பொழுது பார் அவன் கையிலிருப்பதை இதழ் எல்லாம் போய்விட்டதால் பொலிவிழந்து அழகிழந்த காம்பு. இதை அடையவேண்டுமென்று யாராவது துடிப்பார்களா?...... சரி, ஒரு நண்பனை வந்துசந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். அவசரம் போகவேண்டும. விடைகொடு; நாளை சந்திப்போம்." அவள் பதிலையும் எதிர்பாராது புறப்பட்டான்.

மறுநாள் அவனைத் தேடிவந்தாள் பிரேமா. பூட்டிய அவன் அறைக்கதவு அவளை வரவேற்றது. தினம் தினம் வந்து பார்த்தாள். தினமும் ஏமாற்றந்தான், ஆயினும் நாளும் பொழுதும வந்து பார்த்துக் கொண்டே இருக்கின்றாள். அவள் எதிர்பார்ப்பவன் என்றுதான் அவளிடம் வருவானோ? அல்லது என்றுமே ஏமாற்றந்தானோ?

---

## கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்:

கவிதைக்கலை வளர்ச்சிக்குப் புதியவேகம் நல்கவேண்டுமென்னும் பெருநோக்குடன் நிறுவப்பட்டுள்ளது கவிஞர் சங்கம். இச்சங்கம் உருப்படியான சாதனைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் உறுப்பினர் பலர்கொண்ட பலமிக்க தாபனமாக அது வளருதல் வேணடும். அதற்குக் கவிஞர் பெருமக்களின் மனமுவந்த ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

எனவே இச்சங்கத்திலே சேர்ந்து சங்கத்தின் நற்பணிகளுக்கு உறுதுணையாக அமையுமாறு கவிஞர்களனைவரையும் சங்கம் வேண்டிக்கொள்கிறது. அங்கத்தவராகும் விருப்புடையோர் சங்கச் செயலவருடன் தொடர்பு கொள்ளல்வேண்டும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

இ. முருகையன்

15, லயாட்சு வீதி, கொழும்பு-5.

---

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்.

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

# ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி ரோட்,

யாழ்ப்பாணம்.

தந்தி ESVES

தமிழறிஞர் கபிலர் தலை நகரில் உள்ளார்
தமிழ்மறையின் புகழ் பரப்பும் தகைமையாளர்
தமிழ்தூய்மை அடையத் தரும்கவிதை காண்போம்.

# தக்கமுறையிலே தமிழைப் போற்றுக!

—கபிலர்—

தமிழரென்று பெயர்கொண்டோர் தமிழ்த்தாயை மதிக்காமல்
உமிதன்னை அரிசியுடன் உலைஏற்றி அடுவார்போல்
மானத்தை அழிக்கின்ற மதிகெட்ட செயல்களினை
ஊனமது மிகப்பெருக உணர்வின்றிச் செய்துவரும்
பண்புகெட்ட நிலைமையினைப் பார்த்திடவே பெருந்துன்பம்
புண்ணுள்ளே பெருநெருப்புப் புகுந்துநின்று சுடுதல்போல்
உள்ளத்தைச் சுடுகுதம்மா! உணர்ச்சியினைக் கருக்குதம்மா
எள்ளளவு மொழிப்பற்றும் இன்றியிவர் வாழ்கின்றார்.

திரைப்படத்தால் தமிழருக்குச் சேவைபல செய்தற்கு
விரைகின்ற பெருமக்கள் வேற்றுமொழிச் சொற்களினை
(புரொடக்ஷன், ஆர்கெஸ்ட்ரா, புரொஸஸிங், போட்டோகிராப்பு
புரொட்யூசர், டைரக்ஷன் போன்றுள்ள பலவற்றை)
தமிழ் எழுத்தில் வரைந்தின்றும் தயங்காமல் தருகின்றார்;
அமிழ்தன்ன தமிழ்ப் பண்பை அழிக்கின்ற காட்சிகளை
அருவருப்புக் கொள்ளாமல் அமைத்தெமக்குக் காட்டுகின்றார்;
திருந்தவழி சொன்னாலும் சிறிதுமிவர் உளங்கொள்ளார்
காசினிலே கண்வைத்துக் கலைவணிகம் செய்திட்டால்
மாசினையே பெருக்கியது மக்களையும் கெடுத்துவிடும்.

நாளும்நற் கிழமையும் நமக்கிசைந்த விருந்தளிக்க
மூளுகின்ற போட்டியுடன் முயன்றுவரும் ஏடுபல
நயம்மிக்க பலசொற்கள் நம்மொழியில் இருக்கத்தம்
வயமிழந்து மரபிறந்து வரையறையை மிகக்கடந்து
பிறமொழியின் சொற்களினைப் பிடித்திழுத்துத் தமிழுடனே
உறவாக்கித் தமிழ்த்தாயை உருக்குலைக்கும் பணிதன்னை
அஞ்சாமற் சோராமல் ஆற்றியிங்கே உருக்காந்த
நஞ்சைப்போல் விளைக்கின்ற நட்டங்கள் பலவன்றோ!
(மியூசிக் அகாடம்மி, மெஜாரிட்டி, இங்கிலிஷ், கோர்ட்
நியூஸ்பிரின்ட், பார்லிமென்டு, நெம்பர் ரோட் கருதிடுக)

மலர்மாலை தொடுத்திடுவோர் மதியின்றிக் காகிதப்பூ
சிலவற்றை இடையிடையே சேர்த்தெழிலைச் சிதைப்பதுபோல்
தமிழ்எழுத்தை இட்டெழுதத் தக்கபல சொற்களிலே
தூமியினைப்போல் நிலைஇழந்து தொலைந்துவிட்ட கிரந்தமெனும்
எழுத்ததனை வேண்டுமென்றே இட்டெழுதும் கொடுமையேன்னே!
அழுந்திவந்த பழக்கத்தால் ஆங்கிலத்தின் எழுத்துக்கள்
இன்றித் தம் பெயர்களினை எழுதுதற்கு எண்ணுதார்
இன்றுமுளர் என்றால் நம் இழிநிலைமை எத்தகைத்து?

(புஸ்தகம், காங்கிரஸ், ராஜ்யம், பொதுஜனம், சாஹித்தியத்தோடு
எஸ். எஸ். ரி. தலராஜா, எம். வேந்தன்... இவைகாண்க.)

தம்வாழ்வின் துறையெல்லாம் தண்டமிழுக்கு உயர்வளிப்போர்
நம்மிடையே இலரெனலாம், நாடறிந்த உண்மையிது
ஆலயத்தில் விஞ்ஞானம் ஆய்கின்ற மனைதன்னில்
காலத்துக்கு ஏற்றபல கலையூட்டுங் கழகத்தில்
பூத்துநல்ல புகழ்பரப்பிப் பொலிந்திருந்த தன்னாட்டில்
மூத்ததமிழ் தனக்குரிய முதலிடத்தைப் பெறவில்லை.

எம்மினத்தின் வாழ்விலுள்ள எண்ணரிய குறைகளுக்குச்
செம்மை வழிப் பட்டெங்கள் செந்தமிழைப் போற்றுமல்
பிறமொழிகள் மயக்கியிடப் பின்சென்றே நம்பண்புத்
திறம்மறந்து உளம்பிறழ்ந்து சிந்திக்கும் ஆற்றலினை
இழந்தமையே காரணமாம் என்றுணர்வீர்! இனியிந்தப்
பழக்கத்தை அறவொழித்துப் பைந்தமிழை அரியணையில்
ஏற்றிமுதல் இடம்அளிக்க எல்லோரும இயன்றபணி
ஆற்றிடுதற்கு உறுதிகொண்டால் அவனியிலே தலைநிமிர்ந்து
மானமுள்ள இனததினராய் மங்காத புகழுடனே
ஊனமின்றி வாழ்நதிடலாம் உய்ந்து



# என்னைக் கவர்ந்த என் கவிதை

“ தில்லைச்சிவன் ”

எனது கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயம் என்னைக் கவர்ந்தவைகளே. எழுதி உருப்பெற்ற சமயத்திலும், பத்திரிகைகளில் வெளிவந்த போதும் அவற்றைப் படித்து நான் அடைந்த இன்பம் பெரிது. அவற்றின் வடிவத்தைக் கண்டு அடைந்த பெருமிதம், என்னையோர் கவிஞன் என்று யானே நினைக்கும் அளவிற்கு உயர்த்திவைத்தது.

“உனது கவிதைகள் மிக அபாரம். திரும்பத் திரும்பப் படிக்கிறேன்” இப்படி என் முன்னிலையில் கூறிய ஒருவர் அதில் இரண்டு அடிகளையும் பாடினார். அந்த வார்த்தைகளுக்கு இருந்த ஆற்றல், என்னை ஏதோ ஒரு இனந்தெரியாத உலகிற்கு இட்டுச் சென்றது புதுமையல்ல. கவிஞர்கள்-எழுத்தாளர்கள் பலருக்கும் இப்படியான அனுபவங்கள் ஏற்படடிருக்கும். ஏன்? ஒரு சிறந்த மகனைப் பெற்ற தந்தைக்கு ‘இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னுந் சொல்’ எத்தகைய இன்பத்தை அளிக்குமோ அதைவிடப் பெரும் பேரின்பத்தை அவ்வார்த்தைகள் எனக்களித்தன. இதற்குக் காரணம் இல்லாமலுமில்லை. முதன்முதல் கிடைத்த பாராட்டிது எனபதுடன் அப்பாராட்டும் ஒரு பெண்ணின் வாயில் இருந்து பிறந்ததே! அதுதானே?

நான் மட்டமாக நினைத்ததும் மறந்துபோனதுமான அந்தக் கவிதை, அது யாருக்கு எழுதப்பட்டதோ அவளிடம் இருந்து, இரண்டாண்டுகளின் பின் பெற்ற பாராட்டு இது. இப்பாராட்டின் பின்பே அக்கவிதையில் ஏதோ ரசமும் இன்பமும் இருப்பதாக எனக்குப்பட்டது. இதன் பின்பே அக்கவிதைகள், ஐம்பத்தாறில் ‘சுதந்

திர்னில்' வெளிவந்தன. இக்கவிதையின் தோற்றமே ஒரு கதை. தனது காதலிக்குக் கடிதம் எழுத நினைத்த எனது நண்பர் ஒருவர் அதைப்பாட்டாய் எழுதினுல் நன்ருயிருக்கும் என்று எண்ணினுர் அப்பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. உண்மையில் நான் அப்பாட்டுக்களை எழுத ஒரு பத்து நிமிடங்கள் தானும் செலவழிக்கவில்லை. எப்படித்தான இருந்தால் என்ன? பாட்டுருவில் கொடுத்துவிட்டாற் போதும். என்றுதான் அவற்றை எழுதினேன். அவற்றில் ஒன்றை மட்டும் இங்குதருகிறேன், என்னுள்ளத்தைக் கவர்ந்துளதால்.



சில ஆண்டுகட்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து "கலைச்செல்வி" என்ற பெயரிலேயே ஒரு பத்திரிகையை நடாத்தியவர் தில்லைச்சிவன். இவரது சிறந்தகவிதைகளின் தொகுப்பு "கனவுக் கன்னி." [illegible]வணையூரில் [illegible]சிரி[illegible]ராக இருக்கின்[illegible]

"அந்நாளில் எந்நாளும்
அருகாக [illegible]ன்று
'அத்தான்' [illegible]னக் கூவி
ஆட்டங்கள் காட்டி
பின்னுல் [illegible]றென் கண்கள்
பொத்தி [illegible]ன் கன்னம்
பின்னுக முன் வந்தென்
நெஞ்சிற் புதைப்பாய
'கல்யாணம் 'எமக்' கென்று,
பாட்டி சிரிப்பாள்
கண்ணே! யவ் வெண்ணம்
என் உள்ளந்தகிக்க
என்னுளும் எங்கிடும்
என்னை அணைக்க
ஏனோடி தாமதம்
ஏதோ உன்
உள்ளம்?

பலராலும் பாராட்டப்பட்ட "பட்டணத்து மச்சினி' என்றபாட்டு ஏதோ வெளிவந்தது. வெளிவந்ததுதான் அந்தக்காலத்தில் ஒரு அங்கதச்சுவைப்பாட்டைப் படித்த வேகத்தில் அந்தப் பாணியில், 'பாட்டெழுதவேண்டும்' என்ற ஆவல்தான் என்னை அப் பாட்டுக்களைப் பாடத்தூண்டியதே அன்றி; வேறெந்தவிதமான விசேட காரணங்களுமில்லை. ஆனுல் தெரிந்தோ தெரியாமலோ பட்டணத்தில் எனக்கொரு மச்சாள் இருந்துவிட்டது, என்பாடு பெரும்பாடு ஆகிவிட்டது. பரிகாசத்திற்கும், இனத்தவர்களின்

பீடிகளில் ஒரு புதுமை

# அப்துல்லா பீடி!



உழைத்துக்
களைத்து வருபவர்கள்

படித்து, அலுத்து
இருப்பவர்கள்

கனதனவான்கள்

கட்டிளங்காளைகள்

அனைவரும் ஆவலுடன் பாவிப்பது

# அப்துல்லா பீடியே!

**சிறந்த புகையிலையினால்**
திறமையாகத் தயாரிக்கப்படுவது.

## அப்துல்லா பீடிக்கம்பெனி

**முருங்கன்.**

கண்டிப்புக்கும் ஆகும் அள விற்கு என் கவிதைக் காதல் என்னைத் துன்புறுத்தியது. யான் எதற்காகப் பரிகசிக்கப் பட்டேனோ? அந்தக் கவிதை களை, யாருக்காக என் இனத்த வர்கள் என்னைக் கண்டித்தார் களோ? அவளுடன் சேர்ந்து படித்து அனுபவித்த அந்த வே ளையில், அந்தக்கவிதைகள் கவி தைக்காகவே புனையப்பட்டவை என்பதை யான் அறிவேன். அவளறிவாள். அவை என் உள் ளத்தைத் தொட்டு நிற்பவை. அவற்றுள் இறுதியாக நின்ற கவிதை இதோ!

பட்டணத்து
மச்சினியைப்
பார்க்கப் பயமாகுது
கட்டிக்கொண்டால்
வேறுசனியன்
வேண்டாம் என்று தோணுது.


## கலைச்செல்வி

சந்தா விபரம்

—

ஆண்டுச் சந்தா ரூபா 4.
தனிப்பிரதி சதம் 30

விபரங்களுக்கு :

பாலன் வெளியீட்டு நிலையம்
செட்டிகுளம்.


நாடக விமர்சனம்:

## மனிதனா நீ ?

இடம், காலம்: மனோகரா, 13-7-62

தயாரிப்பு: இளம் நடிகர் சங்கம்

தலைப்பு: கவர்ச்சிகரமானது

மூலதனம்: இளைஞர்களின் உழைப் பும் உற்சாகமும்.

கதை: தம்பியின் காதலி அண்ண னுக்கு மனைவியானாள். தம்பி அண்ணியென ஏற்றுக்கொண் டபின், மனிதனா நீ? என்று கேட்பதில் அர்த்தமில்லை.

அறிமுகம்: மங்கலான நடனம் பின்னணியில், பாத்திர அறி முகம் நல்ல உத்தி.

கதாநாயகன்: பத்மநாதன் சுமார் கதை வசன டைரக்‌ஷன் பொ றுப்பாளரும் இவரே.

கதாநாயகி: என்னத்தைச் சொல்ல?

வில்லன்: பொன்னம்பலம், திட் டந்திட்டமான நடிப்பு.

தரகர்: கந்தசாமி சபாஷ்! சபை யோருடன் உரையாடலாமா?

பென்ஷனர்: பாத்திரத்தை மறக்க வில்லை.

வேலைக்காரன்: சிவலிங்கம் கொஞ் சம் ஓவர்.

சங்கிலியன்: கட்! கட்!!

தீர்ப்பு: ஹாஸ்யம் கதையின் போக்கை முந்திக்கொண்டு விட்டது. பார்க்கலாம், —ஈயம்

உலக ஆசைகளை, பாசபந்தங்களைத் துறந்து பிக்குவானவர் கருணரத்ன. மூன்று ஆண்டுகட்குப் பிறகு நினைவு அலைகளும் ஏக்க ஒலிகளும் அவரை வாட்டுகின்றன. அக்காவின் அன்புக் குரலைக் கேட்க ஓடுகின்றார். அவள் அடையாளம் கண்டாளா?




செ. யோகநாதன்

உப்பில் ஊறவைத்த அன்னாசிப் பழத்துண்டைப்போல கரிக்கும் மனவிகாரங்களுக்கிடையேயும் சோமாவதியின் நினைவு கருணரத்தினபிக்குவுக்கு இனிமையைக் கொடுக்கின்றது. அந்த எண்ணத்திவலைகளின் குளுமையிலே அவரது கண்களுக்குள் தவிப்பும், தாபமும் சேர்ந்த நீர் மணிகள் பிரகாசிக்கின்றன.

தளிர் குலுங்க மரங்கள் புத்தாடை புனையும் வசந்த காலத்தின் நடுமையம். அவர் மீண்டும் தனது இளமை கழிந்த மண்ணின் சரசரப்பினில் கால்களை அழுத்திடும் வேகம், அவரது மன உத்வேகத்தின் துடிப்பினைக் காட்டுகின்றது.

'வசந்தகாலம் எவ்வளவு இனிமையானது!' அவரது நெஞ்சம் வில்லாகி வளைந்து பெருமூச்செறிகின்றது. கையில் வைத்துள்ள மடக்கு விசிறியை அவர் கைமாற்றிக் கொள்ளுகின்றார். இடதுகைப் பெருவிரலால் நெற்றியில வழியும் வியர்வைத்துளிகளைச்சுண்டியெறிகின்றார். அலுப்பின் ஆயாசம் அவரது கண்ண இமைகளைச் சுருக்கி வெட்டுகின்றது.

மனதுக்குள் அவருக்கு இனந்தெரியாத தவிப்பு. கமுகமரத்தின் நுனி இலைகள் அதைவளைத்துத் தாழ்த்துவது போல, அமைதித்திரளின் ஊடேயும் நெஞ்சை ஏதோ ஒரு அவா இழுத்து வளைக்கின்றது.

அவர் இப்பொழுது பேராதனைப் பூங்காவை அண்மிவிட்டார். வழுவழுத்த தார் வீதியின் குவிமையத்தினில் கூட, பசுமை ஊற்றெடுத்துப் பிரவகிப்பதுபோல அவருக்கு ஒரு பிரமை. தளிர் விட்டுப் படரும் சிறு அறுகுகளுக்கூடாகவும் அவரது கண்கள் புகுந்து எதையோ தேடுகின்றன,

தொங்கும் பூச்சரங்களால், மரங்கள் தங்கள் இலைகளைத் தெரியப்

படுத்தமுடியவில்லை. பசுமையின் பாய் விரிப்பிலே எத்தனை நிறப்பூக்கொத்துக்கள்! எத்தனை நிறங்குழைந்த வண்ண இதழ்கள்! இதழடுக்குகளின் படுக்கையிலே மென்மை கண்மலர்த் தித்துயில்கின்றது. கண்களும், நெஞ்சமும் பூக்களின் மகரந்தப் பொடியை அள்ளி உண்ணும் அவாவில் மகிழ்கின்றன,

மகிழ்வில் ஒரு மறுகல்.

தோம்பு இலைகளின் அகன்ற பரப்பின் பின்புறச் சுணைப்பினிலே விரல் பட்டதைப்போல பிக்கு கருணரத்ன விரல்களைச் சொடுக்கிக் கொள்ளுகின்றார்.

கண்ணிமைக்கும் பொழுதிலே தோன்றிய அந்த மனமயக்கம், துன்பக் கீற்றினைக் கீறியழிந்தாலும், அந்த நினைவுகள் எவ்வளவு இனிமையானவை! மூன்று வருடங்களுக்கு முன்பு - அவருக்குப் பன்னிரெண்டு வயது நடந்து கொண்டிருந்தபோது இப்பொழுது அவர் கையிலே வைத்திருக்கும் மடக்கு விசிறியைப்போல, அவரது கையிலே வளையமுருட்டும் தடியொன்றிருக்கும். மேடோ, பள்ளமோ, சாய்வோ, சரிவோ எங்கும் அந்த வளையம் தடமிட்டு ஓடிக் கொண்டிருக்கும்.

உச்சி மலையினின்று பெருகும் இளம் அருவிபோன்ற அமைதியும், மென்னோட்டமும் பொதிந்த சோமாவதியின் குரல், மகாவலியின் கரையோரமணற்றிட்டிலே இருந்து பீறிடும் பொழுது கருணரத்தின கமுகம் புதர்களில் ஒளிந்து, மறைந்து விளையாடிய அந்த இனிய நாட்கள்.

அவருக்கு அந்த நினைவுகள்!


## விரைவில் வெளிவருகின்றது!

# வடமொழி இலக்கிய வரலாறு

ஆசிரியர்.

Dr. கா. கைலாஸநாதக் குருக்கள் M. A. Ph. D.

(இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்)

ஸம்ஸ்கிருத மொழியிலுள்ள இலக்கியங்களின் விபரம், அவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாற்று நூல். பல்கலைக் கழகப் புகுமுகவகுப்பு மாணவர்கட்கும் H. S. C. மாணவர்கட்கும இன்றியமையாதது

சாதாரண வாசகர்களும் படித்துப் பயனடையும் வகையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

புத்தக விற்பனையாளர்கள், கல்லூரி அதிபர்கள், மாணவர்கள்

எம்முடன் தொடர்புகொள்க.

**சரஸ்வதி புத்தகசாலை**

175, செட்டியார் தெரு : : கொழும்பு.

மழைக்கால முகில்களாய் நெஞ்சை அடைக்கும். புத்தபிரானின் பாதார விந்தங்களிலே, மௌனம் துலங்க அவர் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் வேளையில்கூட, அமைதியென்பது அவர் நெஞ்சினில் சிறுவேர் பதித்த தில்லை.

மௌனமும் பெருமூச்சும்.

கண்களை விழிக்கும்பொழுது எதிரே அருட்சுடராய்த் தவம்பூண்டிருக்கும் புத்தனின் உருவம் தெரியும். அவனின் காலடியில் கிடக்கும் புஷ்பங்களின் இதழ்களாய் விகாரையின் சட்டங்கள் ஒவ்வொன்றும் தத்துவார்த்தப் பக்கங்களைப் புரளவிடும்.

அடுக்கடுக்கான விதிகள்...

தம்மபதக்குரல், வேள்வித்தீயின் எழும்பலாய் நெஞ்சினுள் விகாசிக்கின்றது.

'ஓ பிக்குகளே! மரத்தை வெட்டினல்மட்டும் போதாது. ஆசைக் காட்டையே அரிந்து தள்ளுங்கள். ஆசைக்காட்டிலிருந்து அபாயம் வருகின்றது. காட்டையும், புதர்களையும் வெட்டிவீழ்த்திய பிறகு நீங்கள் விடுதலை பெறுவீர்கள்!'

புத்தரைப் பருகுங் கண்கள் பக்கத்திற்கு இடறுகின்றன. புத்தரின் அருகேநிற்கும் ஆனந்தரின் உருவம், ஒரு பொய்க்காட்சியை அங்கே பிறப்பிக்கின்றது.

கோபித்தபடியே சம்மாளிகொட்டிக் கொண்டு கண்களை விஷமத்துடன் மூடியபடியிருக்கும் கருணரத்னவை அவனுடைய அக்கா கெஞ்சுவதைப்போல...

கலங்கிய சிந்தனைகளில் முகம் சுருங்குகின்றது. சோமாவதியின் வட்டமான முகம் அவன்முன்பு உருவெளியாகின்றது.

மகிழ்வின் திளைப்புப் புஷ்பித்த அவளின் முகம் அவன் விகாரைக்குப் பிக்குவாகப் போகும்போது மாறிய மாற்றம்......

புஷ்பங்கள் கூட அழுகிப் போகின்றன. ஆனல் ஜீவனுள்ள புஷ்பம், துன்பவெம்மையில் சுருங்கிய பினபு காலப்போக்குக் கொடுத்த தண்மையினல் என்னவிதத்தில் மாற்றம் பெற்றிருக்குமோ?

நெஞ்சில் தத்துவக் குரல்கள் சரத்கால் மேகம் போல வெறுமையுறுகின்றன, கருணரத்தின' பிக்குவின் நடையில் பாசம் துரிதகதி கூட்டுகின்றது.

ஃ ஃ ஃ

நினைவுப்பாறையை அவளே சிற்பியாகிப் பொழிந்து தன்னுடைய உருவத்தை அவன் நெஞ்சில் ஆக்கிவிட்டாள்.

சோமாவதியின் தம்பியாகமட்டும் கருணரத்தின இருக்கவில்லை அவனுக்கு எல்லாமாக அவள் இருந்தாள், தங்களுடைய வயோதிபத்தாய் தந்தையரை அவர்கள் கண்ணிற்குக் கண்ணக காத்தார்கள், சின்னஞ்சிறு காய்கறித் தோட்டம், இளமைநெஞ்சங்களின் களைப்பற்ற உழைப்பில் பசுமையாய்ந்தது.

அவள் புடலங்காய்களுக்கு கல்லுக்கட்டும் வேளையிலே, அவன் கோவா இலைகளை மண் இடிந்துமூடாமல் மணலை புறங்கையால் பின்புறமாக ஒதுக்கிவிடுவான், குப்பைக்குவியலை அவர்கள் இருவரும் கூட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மதியப் பொழுதிலே அவர்களின் குடிசைக்குள்

ளிருந்து வீறிடும் முதுமைக்குரல் அவர்களைப் பதைபதைக்க வைக்கின்றது.

"சோ மா...சோ...மா"

சுள்ளிவிறகின் முறியல்போன்ற முதுமைக்குரலின் அவல ஒலியிலே அவர்கள் அலறிக்கொண்டு ஓடுகிறார்கள், நெடுந்துயர் எழுப்பும் குரல், அயலை விரைந்து அழைக்கின்றது.

குடிசைவாசலிலே, மண்டையுடைந்து ரத்தம் பெருகியபடி கிடக்கும் கருணரத்தினாவின் தந்தையை இருவர் அணுகித் தூக்குகின்றார்கள். அவர்களோடு குறுக்காகப் பாய்ந்து சகோதரர்கள் புலம்புகின்றார்கள்.

பன்னிரண்டு வயதான கருணரத்னா அது நடந்து இரண்டு கிழமைகளின் பின்பு விகாரைக்கு யாத்திரையாகி ......

பேராதணைப் பாலத்தின் மேல் பிக்கு கருணரத்னா நிற்கின்றார். மனவிளக்கில் சோமாவதியே திரியாகி ஒளிகாலுகின்றாள்.

மூன்று வருடங்கள்!

விகாரையில் கழிந்த மூன்று வருடங்கள் முப்பதுவருடங்களாய் தெரிகின்றன. முதுமையுற்ற மனம், பாசத்தின் கட்டற்ற வேகத்தில் மட்டும் துள்ளருவியாய்க் குதிக்கின்றது.

∴ ∴ ∴

ஈரப்பலா இலைகளின் குவியலில் கருணரத்னா தனியாக அமர்ந்திருக்கிறான். விரக்தி செறிந்த கண்கள் ரமணியமான காட்சிகளை அர்த்தமற்று வெறுக்கின்றன.

உள்ளேயிருந்து திடீரென்று ஒரு விசும்பல், அடைத்த குரலின் அந்த அலறலைத் தொடரவிடாது சோமா



வதியின் கெஞ்சல் மேலெழுந்து கேட்கின்றது,

கருணரத்ன எழுகின்றான் நடையிலே மெதுமை. காய்வற்ற நெஞ்சிற்குள்ளே வரண்டகாற்றுகுழப்பங்களைச் சிருஷ்டிக்கின்றது.

குடிசையின் உள்ளே, இப்பொழுது நால்வர் இருக்கின்றார்கள். அவனுடைய தாய், தந்தை, சோமாவதி, ஒரு புத்தபிக்கு.

அவருடைய சீவர ஆடை அவருடையமுதுகுப்புறத்தை முற்றாக மறைத்திருப்பதைப் போல, அங்கேயும் ரகசியம் மௌனத்தாலும், துடிப்பாலும் நெய்யப்பட்டு போர்வையிட்டிருப்பதை போல கருணரத்னவுக்கு உணர்வு தட்டுகின்றது.

அவனையே சோமாவதி உற்று நோக்கிக் கொண்டிருக்கிறாள். புன்னகையின் காந்தி அவளின் முகத்தில் வேதனைத்திரையால் மூடுண்டிருக்க அவள் கைகளைப் பிசைந்து கொண்டு விம்மலை அடக்கப் பிரயத்தனப் படுகின்றாள்.

கட்டிலில் கிடக்கும் தன் தந்தையை அவன் வெறிச்சிட்டுப் பார்க்கிறான். அவருடைய பார்வை தடுமாறுகின்றது.

"கருணா"

அவர் அவனை அழைக்கின்றார். அவன், அவருக்கு அருகாகப்போகின்றான்.

"கருணா, நீ இவரோடு போகின்றாயா?"

நெருப்பின் சூடுபட்டாற்போல, அவன் சோமாவதியைப் பார்க்கின்றான்.

"உன்னைப் பிக்குவாக்க நேர்த்திக் கடன் வைத்திருக்கின்றேன். நீ இவரோடு போகவேண்டும்"

அவனுக்கு உடம்பு படபடக்கின்றது. நெஞ்சைப்போல.

பிக்கு அவனைக் குளிர்மையோடு நோக்குகின்றார். அந்தப் பார்வையிலே அவன் நனைகின்றான்.

"சிறுவா! உன் பெற்றோரின் சொல்லை நிறைவேற்று. காமியங்களை ஒழித்த சீலனாகி, இந்த உலகைவாழ வைப்பதற்காக நீ சீவர ஆடை அணிவாயாக!"

— அது நடந்து இன்னொரு மூன்று வருடங்கள்! கருணரத்ன வீட்டை விட்டுப் போகும் பொழுது சோமாவதியின் முகம் சுருங்கிய சுருக்கம், கருணரத்னவின் நெஞ்சையே பிளந்தெறிந்தது. இதே பாலம் வரை அவளும் அவனோடு வந்தாள். 'அவர்கள் ஒளிந்து விளையாடிய கமுகமரங்களும், நீந்தித்துளைத்த மாவலி ஆறும் அவர்களுக்கு அழுகையை வருவித்தன,

மூனறு வருடங்கள்!

விகாரையின் தனியிடத்திலே, நெஞ்சில் குடிபுகும் வீட்டுச்சிந்தனைகளோடு ஒன்றிக் கழிந்த பொழுதே அதிகமானது! அவள் கருணரத்தின என்ற பெயரினை, 'கணே' 'கணே' என ஆசை ததும்ப, வளையவளைய வந்து கூறிய அந்தநாட்கள் ......

'கணே... கணே...?

மூன்று வருடங்களுக்குப் பிறகு அப்படி அழைக்கப்படும் மகிழ்வு நிகழ்ச்சியை எதிர்நோக்கி அவரின் நடை துரிதப்படுகின்றது.

ஈரியகமத்தின் அச்சிறு வளவிற்குள்தான் எவ்வளவு மாற்றங்கள். அழிவு—ஜனனச் சுற்ருேட்டத்தினில் செடிகள் புதியவையாய்த் தெரிகின்றன.

அவர் வீட்டு முற்றத்தில் வைத்த மாங்கன்று வளர்ந்து கெவர் விடுகின்றது. அதைச் சுற்றி அன்ஞசிச் செடிகள் பீறிட்டு எழுந்து குலே தள்ளியிருக்கின்றன. முன்பு, அவர் அப்படி நடவேண்டுமென்று சோமாவதியிடம் சொல்லியிருந்தார் சோமாவதியை அக்கா என்று அழைக்க நெஞ்சம் துடிக்கின்றது; வீட்டிற்குள் சந்தடியற்ற நிலே அந்த உணர்வினிற்கு எண்ணெய் வார்க்கின்றது. மூன்ருண்டுகள் நெஞ்சினுள் அடங்கியிருந்த பாசம், மடைவெட்டிக் குரலாய் பாய்கின்றது.

"அக்கா... அக்கா..."

குடிசையில் சலசலப்பு; வெளியே தலே நீளுகின்றது அது சோமாவதி.

"அக்கா..."

சீவர ஆடை சரசரக்க, கருணரத்ன முன்னே அடிவைக்கின்ருர். சோமாவதி கால்கள் அசையாது நின்ற இடத்திலேயே நிற்கின்ருள்

"அம்மே... அம்மே... ஹாமுத்ரு..."

கருணரத்னபிக்குவின் காலுள் அக்கினி கொதிக்கின்றது.

⚜ ⚜ ⚜

உள்ளே சென்ற அவருக்கு ததிரையொன்றில் இருக்கை கொடுபடுகின்றது. மூன்று வருடகால இடைவெளியின் பின்பு வீட்டிற்கு


## தமிழ்மொழி
## மாதிரிகை வினப்பத்திரங்கள்

G. C. E. வகுப்பு மாணவருக்கு உகந்தது.
36 விஞப்பத்திரங்கள் கொண்டது

வித்துவான்
ச. சி. ஞானப்பிரகாசம் அவர்கள் அமைத்தது.

**விலே ரூபா 1. 25**

**ஆசீர்வாத அச்சகம் புத்தகசாலே,**
32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,

வந்தால், அக்காவோடு பொய்ச் சண்டை போடலாம், நிலந்திலிருந்து வேடிக்கை பேசலாம் என்றிருந்த அவரின் மன எண்ணம் ஒரு நிமிஷத்தில் தீயால் எரியும் சேனப்புல் லேப்போல எரிந்தொழிந்தது. மூன்று வருடமாக நெஞ்சில் கருக்கூட்டியிருந்து, இப்பொழுது பிரசவிக்க முனகும் பாச அழைப்புக்களும். உரையாடல்களும் வீட்டுக்காரரின் மரியாதைகள் தந்த அதிர்ச்சியால் சிதைவடைகின்றன.

கருணரத்னவுக்கு அச்சாறு என்றால் மிகவும் விருப்பம். அதுவும் சோமாவதியோடு அச்சாறுக்காகச் சண்டை போடுவதென்றால் அது ஒரு தனி இன்பம்.

பிக்கு கருணரத்னவுக்கு வாயூறுகின்றது. மெல்ல எழுந்து குசினிப் பக்கமாகக் காலடி எடுத்து வைக்கின்றார். குசினிக்குள் தலையை நீட்ட, வேர்வையைத் துடைத்துக்கொண்டு சோமாவதி வெளியே வருகிறாள்.

"ஹாமுத்ரு... ஹாமுத்ரு...... இங்கே நீங்கள் வரக்கூடாது..."

வார்த்தைகள் சவுக்காகி, இதயத்தைச் சுற்றி வடுப்படுத்துகின்றன.

"என்ன அக்கா..."

"ஹாமுத்ரு... நீங்கள் என்னை அப்படிச் சொல்லலாமா? நான் சாதாரணமான பெண். நீங்கள் மனமாசு நீங்கிய ஹாமுத்ரு."

"அக்கா..."

கமுக இலைகள் கூவுகின்றன.

"அக்கா நான் உனக்குத் தம்பியில்லையா?"

கருணரத்னப் பிக்குவின் நாத்தளுதளுக்கின்றது. இதய உணர்வுகள் ஓலமாய்க் குழைகின்றன.

அவள் நெளியும் புழுவாய் உள்ளே போகின்றாள்.

அவர் எதிரே கமுக மரங்கள் பசுமையில் நித்யஸ்நானம் செய்தன போல நிற்கின்றன.

அவரின் கண்களில் பழைய காட்சிகள், முன்பு அவர் சோமாவதியோடு ஓடிவிளையாடிய அந்த நாட்களும்... குதூகலமும்...

மூன்று வருடங்கள்!

அவர் மொட்டைத் தலையைத் தடவிக்கொள்ளுகின்றார். சோமாவதியோடும், தனது பெற்றோரோடும் பேசுவதற்காக மனம் நிறைந்திருந்த உருப்போடல்கள் உருவற்றுச் சிதலமடைந்தன.

அவருடைய கண்கள் திண்ணையோரமாக மேய்கின்றன. திண்ணையோர வளைவில் அவர் உருட்டிய சிறுவளையம் கட்டித் தூங்குகின்றது. நிச்சயம் அதை அவள்தான் பாதுகாப்பாகக் கட்டிவைத்திருக்கின்றாள்!

திண்ணையோரமாக அவள் தோன்றுகின்றாள். மெலிந்த உடலில் தெம்பு செத்துவிட்டது. முகத்தினில் களையில்லை.

"ஹாமுத்ரு ஏன் இங்கே நிற்கிறீர்கள்."

பிக்கு கருணரத்ன தன்னை மறக்கின்றார். வெறியின் நிறை தளும்பலில் கூவுகின்றார்.

"அக்கா..."

அது குரலோ? கதறலோ பாசத்தின் முழுவடிவோ? துடிப்புக் கொடி

கட்டிப் பறக்கும் மண்ணில் அதற்கு முழு உருவம் சொல்லமுடியாத முழுமை அது.

சோமாவதி அவரது காலடியிலே வீழ்கின்ருள். வீழ்ந்த வேகத்திலே அவளது கையிலிருந்து இலைப் பொட்டணம் அவிழ...

தரையில் சிந்துவது அச்சாறு. பிக்கு கருணரத்தினவின் நெஞ்சம் அன்பின் கூர்மையில் உருகும் நெய்யாகின்றது,

''அக்...கா''

அவர் அவளை வாரி அள்ளுகின்ருர். அவளின் முதுகுப்புறம் குலுங்கும் நெஞ்சாய் குலுங்குகின்றது. அவர் அவளை இறுகிக் கொண்டு வெதும்புகின்ருர்.

இருவரும் ஒருவரில் ஒருவர் ஆறுதல் கண்டனர்.

ஃ ஃ ஃ

பாவாஸவம் கடிந்த தத்துவம், அவர்களுள் கனன்ற பாசக்குரலில் சாம்பரானது. ஆனல் அந்தச் சாம்பரில் மீண்டும் அவளே நெய் சொரிந்து நெருப்பை மூட்டுவிக்கின்ருள்.

''ஹாமுத்ரு... நீங்கள்... நீங்கள்...''

அவர், அவளைக் கனிவுறநோக்குகிருர். அதிலொரு கெஞ்சல்.

''அக்கா... நீ என்னைக் கணே என்று சொல்லமாட்டாயா?''

அவன் கசிய, அவள்விம்முகின்ருள்.

''அக்கா... நீ அப்படிச் சொல்ல மாட்டாயா...?''

''ஐயோ...தெய்வமே...''

க. செ, 5

விம்மும் அவள், அவரின் முகத்தையே நோக்குகின்ருள். ஊடுருவல் பாவங்கள், மாறியோடும் திரைகளாய் முகத்தில் ஏறிச் சுருண்டு இறங்குகின்றன. அவரைத் தொடப்போகும் கரங்கள் மீண்டும் துவண்டு முறிகின்றன.

'அவனுக்கு இப்பொழுது பதினைந்து வயது; பால் வழியும் அந்த முகத்திலே தத்துவ வாதங்கள் முதுமைச்சுமையை அழுத்தினவா? ஆசை அலைகள் புரளும் நெஞ்சத்தில் திரிபிடகம் பற்றின்மையை விதைத்து பெருமூச்சுமிழும் காடாக்கலைச் செய்ததா? சுருளும் கேசங்களை—சிங்காரிக்கும் மேனியினை மூடியழித்த காரணிகளுள் அவன் ஐக்கியமுற்றவனு? ஐயோ தெய்வமே அவன் எப்படி இதைத்தாங்குவான்?'

''அக்கா என்ன அப்படிப்பார்க்கின்ருய்?'' சோமாவதி கண்களை மூடிக்கொண்டு கூவினுள்.

''தம்பி...... நீ இங்கேயிருந்து போய்விடடா''

பிறகு அவள் உள்ளே ஓடுகின்ருள்,

தம்பீ... தம்பீ... தம்பீ...''

பாசத்தின் கதவு பீற்றலா?

உலகின் மேலுள்ள வெறுப்பைச் சோதிக்கமுடியாத பிக்கு கருணரத்ன தலை குனிந்தார். பிரமையிலிருந்து தோன்றும் சோகம், அவரது மடக்கு விசிறியில் கண்ணீர்த் துளிகளாய் பட்பட்டென்று ஒலித்து வீழ்கின்றது.

அவர் எதிர் பார்த்து வந்தவை தோன்றித் தோன்ருமல் வழிவகுத்த போர்வையுள், அவர் புழுங்கினர்.

அவர் கேட்க விரும்பிய பாச அழைப்பைக் கமுகமரங்கள் விழுங்கிக் கொண்டு பெருமூச்செறிகின்றன.

அவர் குனிந்து கொண்டு நடக்கின்ருர்.

ஃ ஃ

# நான் கண்ட தேவன்

## தேவன் - யாழ்ப்பாணம்

நான் கண்ட தேவன்— ஆம்! எழுத்துலகில் தேவனேதான்— இன்று தேவருலகிற்கு போய்விட்டார். 1944 இல் என் நூல் ஒன்று வெளியாக இருந்தது (அப்புறம் 1949 இல் அது அச்சிலேறியது) அப்போது என் புனைபெயரைப் பற்றி யோசித்தேன். இப்போது ஒளிக்க, மறைக்க வேண்டிய தேவையில்லையே— என் பெயர் மகாதேவா. தேவா எனக் குறுக்கிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. தேவன் என்பது பிடித்திருந்தது. அந்தப் பெயரில் ஒருவர் எழுதிக்குவித்துக் கொண்டிருந்தார். அவருடைய புகழில் பங்கு கொள்ள— ஒரு 'டூப்' அல்லது 'டுப்பிளிக்கேட்' புனைபெயரை வைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆகையால் அந்த 'தேவனுக்கு' ஆர். மகாதேவனுக்கு எழுதினேன், அனுமதி கோரி. தேவன்-ஜூனியர் என்றோ தேவன் - யாழ்ப்பாணம் என்றோ வைத்துக்கொள்ள விரும்புவதாக, அவரே பிந்தியது நன்று யிருக்கும் என்று எழுதினர். 'வயதிலும் அனுபவத்திலும் மூத்தவனாக கருதப்படுவதால் என் ஆசிகள்' என்று தன் கடிதத்தை முடித்திருந்தார். இது முதல் அத்தியாயம்.

இரண்டாவதும் கடைசியும் நான் அவரை நேரில் காரியாலயத்தில் சந்தித்ததாகும். 1955இல் நான் இந்தியாவுக்குச் சென்ற பொழுது என் 'கேட்டதும் நடந்ததும்' என்ற நாவல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்து கொணடிருந்தது, அப்பொழுதே அதை நூல் வடிவில் வெளியிடவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அதற்கு முன்னுரை எழுத 'தேவனை' நேரில் கேட்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஊர் பார்க்க சென்றவன் எங்கும் எந்த எழுத்தாளனையும் காண, அளவளாவ முயற்சி செய்யவில்லை. என் சுற்றுப்பிரயாணம் முடிவடையும் சமயம் சென்னைக்கு வந்தேன். அங்கு எனக்கு என் 'துரோணாசாரியாரை' காண்பதற்கு மட்டுமே ஆவல்.

ஒரு நாள் காலை 9. 45 மணியளவில் ஆனந்தவிகடன் காரியாலயத்துக்குச் சென்றேன். 'அவர் இன்னும் வரவில்லை. இப்பொழுது வந்துவிடுவார்' என்றார்கள். காத்திருந்தேன். கையில் என் நாவலில் முடிவடைந்த 'பாரங்கள்' காற்றில் படபடத்தன. என் நெஞ்சும் படபடத்தது. முன் பின் பார்த்ததில்லை. அவருடைய படத்தைக் கூடக் கண்டதில்லை. அப்பிடியிருக்க அவர் வந்து உள்ளே நுழைவார். நான் யாரோ என்றிருந்துவிட்டால்... இப்படியும் நினைவுகள்.

சில நிமிஷங்களில் M. S. Z. 4320 இலக்கமிட்ட கறுப்பு மொறிஸ் மைனர் கார் வந்து சேர்ந்தது. டிரைவர் ஆசனத்திலிருந்து இறங்கினார் ஒருவர். பார்வையிலேயே, அவர் பவிசிலேயே தெரிந்து கொண்டேன் தேவன் என் முன்னால் நிற்கிரு

ரென்று. போதாக்குறைக்கு ஆபீஸ் பையன் காதில் 'அவர் தான்'என்று ஓதிவிட்டான். வலது கையில் கார் திறப்பு. இடது மணிக்கட்டில் பெரிய கைக்கடிகாரம். வெள்ளை வேட்டி. காலில் செருப்பு வெள்ளை 'ஷர்ட்' ஒற்றைத் தோளில் (இடது) வெள் ளைச்சால்வை பெரிய 'பிரேம்'போட்ட மூக்குக் கண்ணாடி குட்டையாக 'கிராப்' செய்த தலை. பரந்த முகம். அகண்ட நெற்றி, கனிவு குழைத்த, நல்ல தோற்றம்.

நானே ஆரம்பித்தேன். ''யாழ்ப் பாணத்திலிருந்துவந்திருக்கிறேன்...' ''வாருங்கள், உள்ளே வாருங்கள்" என்று என்னையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குள்ளே நுழைந்தார். மேஜைமீது 'புரூப்'கள், எழுதிய காகிதக் கத்தைகள், கடிதங் கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. நாற்காலியில் உட்கார்ந் தார். என்னை எதிரில் உட்காரச் சொன்னார்

பையன் உள்ளே வந்தான். "இதைக் கொண்டு போய் கொடு" என்று எதையோ எடுத்துக் கொடுத் தார். ஒரு சைத்திரீகர் பென்ஸிலால் வரைந்த படத்துடன் நுழைந்தார். 'இதை இரண்டு பக்கங்களுக்கு ஏற்ற படமாக வரையச் சொன்னேன்' என்று அப்படத்தில் இரண்டு எதிர் த்த பக்கங்களில் எவ்வெப்பாகத்தை அப்படம் நிரப்பவேண்டுமென அடை யாளமிட்டுக் காண்பித்தார். நான் அவருடன் பேசிக் கொண்டிருந்த ஒருமணி நேரத்துக்கிடையில் இப்படி ஐந்து ஆறுபேராவது குறுக்கிட்டிருப் பார்கள். அன்புடனும் கனிவுடனும் ஈடுகொடுத்தார்.

''நான் உங்கள் வேலைநேரத் தைக் கெடுக்கிறேன்போலும்'' என் றேன். ''இல்லை உங்களுடன் பேசிக் கொண்டிருக்கவே இன்பமாயிருக் கிறது. சுத்த தமிழ் பேசுகிறீர்கள்'' என்றார். ''என்னுடைய பேச்சில் பிறமொழிக் கலப்பு இருக்கும். ஊரில் அதிகத் தூய்மையுடன் தமிழ்பேசப் படுகிறது..." என்று ஆரம்பித்தவன் ''மலாயாவுக்குப் போகும்போது கொ ழும்புக்கு வந்தீர்கள். யாழ்ப்பாணத் துக்கு வரவில்லையே" என்று என் அங்கலாய்ப்பைத் தெரிவித்தேன்.

''வசதியும் நேரமும் கிடைக்க வில்லை. வரவேண்டுமென்றுதானிருக் கிறேன். நிச்சயம் ஒருநாளைக்கு வருவேன். இப்போது என் நாடகம் ஒன்றைச் சினிமாப்படமாக்குகின்றார் கள். ராத்திரிக்கூட ஷூட்டிங்குக்குப் போயிருந்தேன்'' என்றார். இதற் கிடையில் தேநீர் வந்தது, எப்போது யாரிடம் சொல்லியனுப்பினர் என்பது எனக்கே தெரியாது.

கேட்கலாமா, விடலாமா என்று தயங்கிக்கொண்டேயிருந்தவன் ''உங் கள்மீது அபிமானம்கொண்ட சிலர் விகடனில் வெளியான உங்கள் கதைகளைப் பைண்டுசெய்துவைத்

அமைதியாக இருந்து அரு மையான கதைகளையும் கட்டுரை களையும் எழுதி வாசகர் நெஞ்சில் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்றவர் ஆனந்தவிகடன் தே வன். அவருடன் தான்கொண்ட அன்புத் தொடர்பைப் பற்றிக் கூறுகின்றார் அவரைத் தன் எழுத்துலகக் குருநாதராகப் போற்றும் தேவன் — யாழ்ப் பாணம்.

சந்தா நேயர்களுக்கு

# இலவச
# தென்இந்தியப் பிரயாணம்

1962ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30ந் திகதி வரை "கலைச் செல்வி"யின் சந்தாதாரராகப் பதிவுசெய்து கொள்ளும் அன்பர்களுள் அதிர்ஷ்ட சாலியான ஒருவருக்குத் தென்இந்தியா செல்லும் வாய்ப்பு உண்டு.

"கலைச்செல்வி"யின் ஆண்டுச்சந்தாவாகிய நான்கு ரூபாவினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டை அன்பர்கள் கவனமாக வைத்திருக்கவேண்டும், ஐப்பசி மாதம் முதலாந் திகதி, சந்தா நேயர்களின் பெயர்கள் குலுக்கிப் போடப்பட்டு, அதிர்ஷ்டசாலி பொறுக்கி எடுக்கப் படுவார்

நேயர்கள் முன்னிலையில் இத்தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கப் படுபவரை எமது செலவில் தென் இந்தியாவிற்கு அழைத்துச் சென்று சரித்திர, சமய சம்பந்தமான இடங்களைக் காட்டுவதுடன், சிறந்த எழுத்தாளர்களையும் சினிமா நடிகர்களையும் அறிமுகம் செய்து வைப்போம்

மறந்துவிடாதீர்கள், நீங்கள் செலுத்தவேண்டிய பணம் ஆக நான்கே நான்கு ரூபா தான். இந்தப் பணத்தை அனுப்பினால், 12 மாதங்களுக்குத் தொடர்ந்து "கலைச்செல்வி"யைப் படித்து மகிழ்வதுடன் தென் இந்திய இயற்கை அழகுகளையும் பார்த்து மகிழலாம்.

இன்றே உங்கள் சந்தாப் பணமாகிய நான்கு ரூபாவையும் காசுக்கட்டளை அல்லது அஞ்சற்கட்டளையில்

காசு பெறுபவர் : நிர்வாகி, கலைச்செல்வி

காசு பெறுமிடம் : செட்டிகுளம்

என்று தெளிவாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி:-

## கலைச்செல்வி

பாலன் வெளியீட்டு நிலையம்,

செட்டிகுளம், இலங்கை.

திருக்கிறார்கள். நூல்களாக அவற்றை வெளியிட்டால் நல்ல வரவேற்பிருக்குமே" என்று கேட்டேவிட்டேன்.

"இரண்டொரு தடவை முதலாளியிடம் கேட்டுப்பார்த்தேன். அவர் அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. மேலும் வற்புறுத்தினால் முதலாளி தொழிலாளி என்கிற உறவுக்கு நன்றாயிருக்காதே என்று விட்டுவிட்டேன்" என்று அவர் சொல்லும்போது முதலாளியிடம் கொண்டிருந்த பவ்யமும் திருப்தியும் தொனித்தபோதும், தன் படைப்புக்களை நூல் வடிவில் பார்க்கும் ஆசை அடிமனத்திலிருந்ததுபோலத் தொனித்தது.

என் நூலைப்பற்றி முதலிலேயே ஆரம்பித்த பேச்சைப் பின்பும் தொடர்ந்து "இவ்வளவு பாரங்களையும் தரட்டுமா? அல்லது......" என்று இழுத்தேன். "விருப்பம் போலச் செய்யுங்கள். இப்படியே கொடுத்தால் இவற்றைப் படித்துவிட்டு மீதியை பத்திரிகையில் படிக்கிறேன். அல்லது முழுவதையும் அனுப்பி வைப்பதாயிருந்தாலும் சரி" என்றார்.

"உங்களைப் படம் பிடிக்க விரும்புகிறேன்" என்றேன், "இங்கேயே பிடித்துக் கொள்வீர்களா?" என்று கேட்டார். 'என்னிடம் பிளாஷ் இல்லை' என்று இளித்தேன். 'சரி' என்று எழுந்து வந்தார். மாநிழலில் நின்ற தன் காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டார். இரண்டு படங்கள் எடுத்தேன்.

புறப்பட ஆரம்பிக்கும் சமயம் 'பழநிக்குப் போயிருக்கிறீர்களா?' என்று ஆரம்பித்தார். 'ஓ! போயிருக்கிறேன்...' என்று நான் வர்ணிக்க ஆரம்பித்ததும் 'இல்லையில்லை. சென்னையிலேயே இருக்கிற வட பழநியை கட்டாயம் பாருங்கள். மிகவும் நிம்மதியான ஸ்தலம். நானே கூட்டிச் சென்று உங்களைக் காணபிப்பேன். இப்பொழுது நேரம் வசதியாயில்லை' என்று அவர் குறுக்கிட்டவுடன் அவருடைய முருக பக்தியும் கதைகளில் அடிக்கடி வரும் வடபழநியும் என் மனதில் பளிச்சிட்டன.

நடுவயதில் அவர் போய்விட்டார். அவருடைய ஞாபகார்த்தக் கூட்டத்தில் பேசும் போது (யாழ்ப்பாணத்தில்) நான் அழுதேன். நிச்சயம் வருவேன் என்றவர் அன்று கட்டாயம் எங்கள் மத்தியில் நின்றிருப்பார், அவருடைய நூல்கள் விகடன் பிரசுரமாக வரும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.

அவருடைய ஆசியோடு எழுத ஆரம்பித்த எனக்கு, எழுத்தாளர் அவரிடம் கற்றுக்கொள்ள நிறைய இருப்பதாகவே தோன்றுகின்றது. இனிய பேச்சு, படபடப்பின்மை, சாந்தம், எளிமை. கட்டுப்பாடு, கண்ணியம், கடவுட்பக்தி — இப்படி எவ்வளவோ சொல்லலாம்.

### கலைச்செல்வி வாழ்க!

புதுமைக் கலைகள் பற்பலவும்
போற்றி நாளும் ஈழத்தில்
மதியாய் வளர்ந்து செந்தமிழை
வானப் புகழில் ஏற்றி நிதம்
முதுகு சொறியும் வேலைக்கு
முற்றுப் புள்ளி வைத்திட்டு
நிதியாய் எங்கள் "கலைச்செல்வி"
நீடு வாழி! வாழியரோ!

—சொக்கன்,

# தூதுப் பிரபந்த வளர்ச்சி

## —செட்டிகுளம் பூலோகசிங்கம்—

ஆவணி இதழ் 110ம் பக்கத் தொடர்ச்சி

சங்ககாலத்துப் புலவர் தூதுப் பொருளைத் தனிப்பாடல்களிற் பாடினர். பல்லவர் காலத்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் தூதுப்பொருளைப் பதிகங்களிற் பாடினுர்கள். தூதுப்பொருளமைந்த பாடல்கள் இக்காலத்திற் பதிகங்களாக மட்டுமன்றி ஏனையவகைப் பிரபந்தங்களின் உறுப்பாகவும் பயன் படுத்தப் பட்டுள்ளன. சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத் தந்தாதியும் பெயரறியாப் புலவர் பாடிய நந்திக் கலம்பகமும் தம்மகத்தே தூதுப் பாடல்களை உள்ளனவாய்க் காணப் படுகின்றன. இறைவனைப்பாடிய அடியார்கள் மட்டுமல்லாமல் புரவலரைப் பாட வந்த புலவர்களும் தூதுப் பாடல்களைப் பாடியுள்ளமைக்கு நந்திக் கலம்பகமும் முத்தொள்ளாயிரமும் சான்று பகர்வன. சங்க இலக்கியத்திற் தனிப்பாடல்களிற் தலைவியின் மனமயக்கத்தைப் புலப் படுத்துவதாக அன்பினைந்திணையில் அமைந்த தூதுப்பாடல்கள், பல்லவர் காலப் பதிகங்கள், அந்தாதி, கலம்பகம் முதலியவற்றிற் கைக்கிளையில் அமைந்து கடவுளையும் மன்னனையும் பாடப்பயன்பட்டன. சங்க காலம் தொட்டு வளர்ந்து வந்த இம் மரபு சோழர் காலத்திற் தூதுபற்றித் தனிப்பிரபந்தம் தோன்றக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியது,

பதின்மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் பதினன்காம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவராகக் கருதப்படும் உமாபதி சிவாசாரியருக்கு முன்பு தமிழிற் தனி முறையிற் தூதுப்பிரபந்தம் இருந்ததாகக் கருதச் சான்று கிடைத்திலது. இவர் பாடிய நெஞ்சுவிடுதூது சைவ சித்தாந்தத்தை நோக்கமாகக் கொண்டு ஞானசிரியனைப் பாடப் பயன்படுத்தப் பட்டுள்ளது, தத்துவராயர் பாடிய நெஞ்சுவிடுதூதும் ஞானசிரியர்மீது பாடப்பட்டதாம். பல்லவர் காலத்தில் வாழ்ந்த மெய்யடியார்களின் வரலாறுகள், அவர்கள் பாடிய திருப்பதிகங்கள் முதலியன நன்கு பரவிவளர்ந்த காலம் சோழர் காலம். இராசராசனுக்கு முற்பட்டகாலத்திலேயே திருப்பதிகங்கள் ஓதப்பட்டன எனக் கல்வெட்டுகள் மூலம் அறிகிரேம். இராசராசனுக்குப்பின் எழுந்த கல்வெட்டுகள் திருப்பதிகங்கள் பாடப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதைக் குறிப்பன. மேலும் தான் கட்டிய தஞ்சை இராசராசேச்சரத்திற் தேவாரம் பாடிய மூவர் திருமேனிகளையும் இராசராசன் வைத்துப் பூசித்தமைக்குக் கல்வெட்டுகள் சான்று பகர்வன. மூவர் ஏற்றிய ஒளிவிளக்கை இராசராசன் மேலும் பிரகாசிக்க வைத்தான் எனத் திருமுறை கண்டபுராணம் கூறுகின்றது. தேவாரம் பாடியவர்கள் மீது மக்கள் பக்தியை வளர்த்து, அவர்கள் இசைச்செல்வத்தை தொகுத்து, அவர்கள் பாடிய தலங்களைக் கற்றளிகளாக மாற்றிப் புதுக்கோவில்களைக் கட்டிப் பல்லவர்காலப் பக்தித் தீபத்தைச் சோழப்பெருமன்னர் சுடர்விட்

டெரியச் செய்தனர். இச்சமயப்பற்றினல் விளைந்த 'இலக்கிய முயற்சி தத்துவம் பற்றியது. பதின்மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் எனத்தெரியும் மெய்கண்டாருக்கு முன்னும் பின்னும் பதின்ஞன்கு சைவசித்தாந்த சாத்திர நூல்களும் தோன்றின. இத்தகைய சூழ்நிலையிற் சித்தாந்திகளால் இயற்றப்பட்ட தூதுப்பிரபந்தங்கள் சைவசித்தாந்தத்தை முக்கிய பொருளாகக் கொண்டு எழுந்தன.

நாயக்கர் காலப்பிரிவிற் தோன்றிய தூதுப்பிரபந்தங்கள் பெரும்பாலும் தலமுறை தெய்வங்கள் மீது பாடப்பட்டவை. சில வள்ளல்களையும் ஞானசிரியர்களையும் பாட எழுந்தன. சோழப்பெருமன்னர் தூண்டிவிட்ட ஒளி விளக்கு நாயக்கர் காலத்தில் அணைந்துவிடும் நிலையை அடைந்தது எனலாம். தென்னட்டின் செல்வத்தைச் சூறையாடும் நோக்குடன் படையெடுத்த முகமதியர் கோயில்களைப் பாழ்படுத்தினர். இப்பேராபத்தில் இருந்து இந்து சமயத்தையும் இந்து நாகரிகத்தையும் காப்பாற்ற விசயநகரத்தில் ஒரு பேரரசு நிறுவப்பட்டது. தமிழ்நாடும் இப்பேரரசின் ஆணையின்கீழ் இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் கோயில்கள் இலக்கியத்தில் முக்கிய பொருளாக விளங்கின. தமிழ்விடுதூது மதுரைச் சொக்கநாதர் மீதும், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் மேகவிடுதூது திருநிரையூர் நம்பி மீதும் பதினெட்டாம் நூற்ருண்டின் முன் பாடப்பட்டவை, வரத பண்டிதர். கச்சியப்பமுனிவர், மாரிமுத்துப்பிள்ளை, பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை முதலியோர் பதினெட்டாம் நூற்ருண்டிற் பாடிய தூதுப் பிரபந்தங்கள் தலமுறை தெய்வங்கள் மீது பாடப்பட்டவை. பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சீனிச்சர்க்கரைப் புலவர் பழனி மலையில் வீற்றிருக்கும் சுப்பிரமணியர் மீது பாடிய புகையிலைவிடு தூதும் தலமுறை தெய்வம் மீது பாடியதாகும்.

நாயக்கர் காலத்திற் தமிழ்நாட்டில் நிலவிய சமயவுணர்ச்சி பல சமயச்சார்பான தாபனங்கள் தோன்ற இடமளித்தது. சமயவுணர்வு மழுங்காத முறையிற் சமூகம் விளிப்பாக இருக்கவேண்டிய நிலையையும் ஏற்படுத்த வேண்டி இருந்தது. இத்தேவையினைப் பூர்த்திசெய்யப் பல மடங்களும் ஆதீனங்களும் தோன்றிச் சமய நூலறிவை விருத்திசெய்ய முற்பட்டன. எனவே இக்காலத்திலும் தத்துவ வளர்ச்சிக்கு உரிய சூழ்நிலை நிலவியது, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்க லீலையில் வீரசைவ தத்துவத்தைப் பாடியதோடு அமையாது வீரசைவக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஞானசிரியர்மீது நெஞ்சுவிடுதூது பாடினர்.

—தொடரும்


**மறக்கவேண்டாம்!**

இம்மாதம் 30-ந் திகதிக்கு முன் புதிய சந்தாதாரராகச் சேர்பவர்கள்—பழைய சந்தாவைப் புதுப்பிப்பவர்கள்— இவர்களுள் அதிர்ஷ்டசாலியானவர் எமது செலவில் தென் இந்தியாவிற்குச் செல்லலாம்! விபரங்களை 36ம் பக்கத்தில் பாருங்கள்.

# S. SINNATHURAI & BRO,

Importers & Exporters. Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்

உல்லாசமாகப் புகைப்பதற்கு




786 கல்கி பீடி

## 786 கல்கி பீடிகள்

திறம்பீடிப் புகையிலை, பீடி இலை,

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. றோட் : : யாழ்பாணம்.

கிளை:

44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு


தொழிற்சாலை:

118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

பேட்டிக்கட்டுரை

உமாசுதன்

ஓவிய மன்னர்



மாதவன் அவர்கள்

ஓவிய மன்னர் மாதவன் அவர்களும், ''சுதந்திரன்'' துணையாசிரியர் இரா. பத்மநாதன் அவர்களும்.

தமிழ்த்தாய் தமிழகத்திற்களித்த சிறந்த கலைஞர்களுள் ஓவியமன்னரும் ஒருவர். இவர் திருவனந்தபுரத்திற் பிறந்து தனது தாய் மாமனிமுடம் ஓவியக் கல்லூரியிலும் கலைபயின்று இளமையிலேயே புகழ்சிறந்து நிலைபெற்றவர். கவின்மிகு கேரளத்தின் மணிவயிற்றில் பிறந்தாலும் அவர் தமிழகத்தின் தலைநகராம் சென்னை நகர் வந்தே அழகான திறம்மிகுந்த ஓவியங்கள் வரைந்து கலை வாழ்க்கையில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டார். பசியாற் கதறும் பச்சிளங்குழந்தையும் அவர்தம் பாங்கான சித்திரத்தில் பசிபறந்து மழலை மொழி சிந்தும். தமிழகத்தின் ஏடுகள் எல்லாம் ஓவிய மன்னர் அவர்களின் உணர்வூட்டும் உயிரோவியங்களால் ஏற்றம் பெற்றவைதான். இவர்தம் ஓவியத்திறனால் நாடகமன்றங்களே சோபித்து விளங்கின. குறிப்பாக டி. கே. எஸ், நாடகக் குழுவும் N. S. K. நாடகமன்றமும் திரு. மாதவன் அவர்களைத் தம் ஓவியராய் ஏற்றுப் பெருமை கொண்டனவாகும். "உயிரோவியம் வரைவதில் ஓவிய மன்னரைப்போல் இன்று வேறெவரும் இல்லை என்று துணிந்து கூறமுடியும்" என்று அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் கூறுகின்றார்கள்.

சமீபத்தில் இவரைத் தலைவராகக் கொண்டு சென்னையில் ஓர் ஓவியர்

சங்கம் அமைத்துள்ளார்கள். ஓவியர் சங்கத்தின் தலைவராக மாதவன் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்தே அவரது தன்னிகரில்லாத் தனிப்பெருந்திறமை புலப்படும். தமிழகத்தின் சித்திரக் கலைஞர்கள் தம் கலைச்சங்கத்திற்கு நாயகனாக கலைச்செம்மல் மாதவன் அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அது அவரிடம் உள்ள உண்மையான கலையின் சிறப்பேயன்றி வேறல்ல, திரு டி. கே. சண்முகம், நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் இருவரும் ஓவியமன்னரது இணைபிரியா நண்பர்கள். கலைவாணரின் பிரிவால் மாதவன் அவர்கள் மிகவும் மனம் கலங்கியிருந்தார்கள்.

இவர் வெறும் சைத்ரீகர் மட்டுமல்ல, நாடக நடிகர் மிருதங்க வித்வான், பாடகர் என்ற பல திறனும் படைத்தவர். இலக்கிய ரஸனையும் உடையவர், சிறப்பாக நுண்கலைகளில் மிகவும் ஈடுபாடுடையவர்கள். இயற்கையை ரஸிப்பதும், இயற்கைக்கு விரோதமில்லாத வண்ணக்கலை அழகைப் படைப்பதும் இவரது விருப்பமாகும், திரைப்படமொன்றுக்கு பானர் வரைந்து விட்டார் மாதவன் என்றால் கலைஞர்கள் பலரும் வாயில் விரல் வைத்து நேரம் போவதே தெரியாமல் ரஸிப்பர், அதன் கலை நுணுக்கத்தைக் கவனித்துத் தாமும் வரைவர், இவரிடம் கலை பயிலாதவர்கள்கூட இவரது கலைத்திறனை வியந்து ஏகலைவன்போல் கலைபயின்றுள்ளார்கள். இவரது ஓவியத்திறனால் மக்கள் இதயத்தில் இடம்பிடித்த சினிமா நடிகர்களும் பலர் இருக்கிறார்கள். ஓவியத்தின் எழிலும், அங்கு செறிந்துள்ள உணர்ச்சி ஊட்டங்களும் நடிகனின் தரத்தையுயர்த்திப்' பாமர ஜனங்களிடை பரபரப்பையூட்டவைத்த பெருமை மாதவன் ஒருவரையேசாரும். இவரால் முன்னணிக்கு வந்த நடிகர்கள் இன்று தமிழ் நாட்டில் பலருளர்.

புன்சிரிப்புத்தவழும் முகமும் தாம்பூலம் தரித்த வாயும், சாந்த குணமும், நடுத்தர உயரமும், சாதாரண உடையும், ஆடம்பரமற்ற அமைதியான வாழ்வும், அடக்கமான இனிமை நிறைந்த பேச்சும், எவரையும் எளிதில் கவர்ந்துவிடும் தன்மையையும் கொண்ட ஓவிய மன்னர் அவர்களை நான் பேட்டி காணச் சென்றபொழுது சற்று உடல் நலம் குன்றி இருந்தார். எனினும் என்னைக் கண்டவுடன் உடல் நலிவிலும் முகம் மலர்ந்து, "ஹலோ! வணக்கம்! வாங்க! வாங்க!" என்று வரவேற்றார். அவர் எனது அன்புக்குப் பாத்திரமானவர். அவரிடம் எனது வணக்கத்தைத் தெரிவித்து, "இன்று உங்களை ஈழத்திலிருந்து வெளிவரும் எமது கலைச்செல்வியின் சார்பில் பேட்டிகாண வந்துள்ளேன். ஒரு சில கேள்விகளுக்கு மட்டும் சிரமம்பாராது விடையளிக் வேண்டும்" என்றேன்.

"உங்கள் அன்புக் கட்டளையை மீற எனக்குச் சக்தியில்லை. ஆனால் ஒரு வேண்டுகோள். என்னுடன் தாங்களும் ஆப்பம் சாப்பிட்டுக் காப்பியருந்தினால் மட்டுமே பேட்டி ஆரம்பிக்க அனுமதிப்பேன்," என்று கூறினார்கள். அவரது அன்புக்கட்டளையை என்னாலும் மறுக்க முடியவில்லை. அவர் எண்ணப்படி சிற்றுண்டியுடன் பேட்டியை ஆரம்பித்தேன்.

உங்களுக்கு ஓவியம் கற்றுக் கொடுத்தது யார்?

எனக்கு ஒருவரல்ல நால்வர் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் நால்வரும் எனது தாய்மாமன்மார் என்பது குறிப்பிடத்தக்கது. தாணு ஆச்சாரி, கேசவன் ஆச்சாரி, பத்மநாப ஆச்சாரி, ராமகிருஷ்ணன் ஆச்சாரி என்பது அவர்தம் பெயர்கள்.

அப்படியானல் உங்கள் குடும்பமே ஒரு ......?

ஆமா! ஆமா! எங்கள் குடும்பமே சித்திரக் கலைக்குடும்பந்தான். இவர்கள் நால்வரில் கேசவன் ஆச்சாரி பெண் கொடுத்தமாமன். ராமகிருஷ்ணன் ஆச்சாரி என்னை வளர்த்த தந்தை போன்றவர். இவர் ஓவியர் R. நடராஜனின் தந்தை.

இவர்களை விட வேறு எங்காவது கலை பயின்றீர்களா?

ஆம்! ஸ்கூல் ஆப் ஆட்ஸ் திருவனந்தபுரத்தில் ஐந்து வருடங்கள் பயின்றேன்,

திருவனந்த புரத்தை விட்டுத் தமிழ்நாட்டுக்கு எப்பொழுது வந்தீர்கள்?

அந்தக் காலத்தில் பிரபலமாயிருந்த கோல்டன் நாடகக் கம்பெனியாருடன்தான் நான் முதன் முதல் தமிழ்நாடுவந்தேன் பின்னர் வேறு கம்பெனிகளுக்கு மாறினேன்.

அப்பொழுது உங்கள் வயது?

சுமார் இருபது இருக்கும்.

நீங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து......?

அநேகமாக முப்பது வருடங்களாகின்றன

உங்களுக்குப் பிடித்த ஓவியர்கள்......?

அன்றிருந்த ராஜா ரவிவர்மா என் மனதைக் கவர்ந்தவர். இன்று சேகர், மணியம், பால்ராஜ், கந்தசாமி, சீனு, பாலுபிரதர்ஸ், மோகன் இதுமாதிரிக் குறிப்பிட்ட சிலரை எனக்கு மிகவும் பிடிக்கும்.

மேலை நாட்டில்?

ஜேம் மட்டார்னி எனக்கு மிகவும் பிடித்தவர், மேலை நாட்டவர்களில் யார்மேல் யார் கீழ் என்று சொல்ல முடியாதபடி அவ்வளவு சிறந்தவர்களாக உள்ளார்கள்.

நீங்கள் திரைப்படங்களுக்கு ஆர்ட்டைரக்டராகப் பணியாற்றியிருக்கிறீர்களா?

மணமகள், நீதிபதி, துளிவிஷம், பணம், ரங்கோன் ராதா, சிங்களப்படமான டிங்கிரி மெனிக்கா' போன்றவை எனது ஆர்ட்டைரக்‌ஷனில் வெளிவந்தவை.

தங்களுகுக் அரசியற் கட்சிகளில் ஈடுபாடு உண்டா?

எனக்கு எந்த ஒரு கட்சியிலும் ஈடுபாடு கிடையாது.

நீங்கள் ஈழத்திற்கு வந்திருக்கிறீர்களா?

சுமார் முப்பது வருடங்களின் முன்னர் டி. கே. ஷண்முகம் நாடகக் குழுவினருடன் ஜிந்துப்பிட்டித் தியேட்டருக்கு நாடகம் நடாத்த வந்துள்ளோம்.

தற்பொழுது ஈழம் வர வேண்டுமென்றஅவா இருக்கின்றதா?

மிக மிக ஆசையாயிருக்கின்றது

எதிர்காலத் திட்டங்கள் ஏதாவது?

சிறந்த சித்திரங்கள் வரைந்து

விளக்கங்கள் எழுதி நூல் வடிவில் வெளியிட வேண்டும் என்ற பேரவா தவிர வேறெதுவுமில்லை.

உங்களுக்குப் பிடித்தவர்கள்?

காந்தி, நேரு, ராஜாஜி, அண்ணா, டி. கே. எஸ். பிரதர்ஸ், சிவாஜி, தங்கவேல் போன்றவர்களை ரொம்பப் பிடிக்கும். அறிவாளிகளை, அன்பர்களை மிக மிகப் பிடிக்கும். என் மனைவியையும், பெண்களிருவரையும், பையனையும் கூடப்பிடிக்கும்.

உங்கள் பொழுது போக்கு?

சித்திரம், சங்கீதம்.

கலைச்செல்விக்கும் அதன் வாசகர்கட்கும்......?

நல்ல கலைச்சேவை செய்யும் கலைச்செல்வியின் வாசகர்கள் நல்ல பாக்கியசாலிகள், கலைச்செல்வியும், அதன் வாசகர்களும் நீடுவாழ ஆண்டவனை வேண்டுகிறேன் கலைச்செல்விக்கும், அதன் வாசகர்கட்கும் தங்களுக்கும் எனது அன்பு கலந்த வணக்கமும் நன்றிகளும்.

---

சென்ற இதழில் வெளியான மாதவன் அவர்களின் ஓவியத்திற்கேற்ற காவியத்தை ஈழத்துக் கவிஞர் பலர் அனுப்பியிருந்தார்கள். அவற்றுள் இரண்டை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

# ஓவியமும் காவியமும்

## 1. பா. சத்தியசீலன்

'இழும்' என் மொழிபழகி அழகு மலைதவழ்ந்து
 இழியும் அருவிபொழி எழிலெல்லாம் — ஆங்கு
அழகின் பொருள் மொழிந்து அதனொ டிசைபொழிந்து
 அமர நின்ற உந்தன் அழகெலாம் — சங்கத்
தமிழின் சுவையெடுத்து தகைமென் கவிபடைத்து
 தரணி புகழத்தினம் தருகிறேன் — 'இது
அமுதென்' றெடுத்துஇந்த அவனி நுகரும் ஒரு
 கவிதைத் திறமெனக்குக் காட்டுவாய்.

அழகு மயிலிதொன்று அட! மென் துகிலணிந்து
 அதுபார்! நின்றதென்று அறைகிறேன் — அந்தப்
பொழிலின் மலர்பறித்துப் புயல்மென் குழலிருத்திப்
 பொலியும் கொடியிதென்று புகழ்கிறேன் — வல்லார்
மொழியும் கலையில் - அந்த அழகின் குழைவில் நின்ற
 முதல்வி இவள் என்றிங்கு மொழிகிறேன் — நல்ல
பழகு தமிழெடுத்துப் புதிய 'கரு' விருத்திப்
 பாடும் வரமெனக்குக் கோடிதா!

கங்கைச் சடையுடை கடவுள் நுதலின் விழி
கனலும் பொழுதும் மனம் குலைவுரு — அந்தச்
சங்கப் புலவன் நெஞ்சில் தங்கிக் கவிபொழிந்த
தலைவி இவளென்றிங்கு சாற்றுவேன் — 'சிலர்
இங்குத் தமிழர்பண்பை இழித்துப் பழித்தழித்து
இன்னல் புரிவரெனில் அன்னவர் — படச்
சிங்க மெனவே பாய்ந்து அங்கவ் வணிகளிடைச்
சீறக் கவிதையிலே வீறுதா!

## 2 ஈழத்துறைவன்

மலர்கண்டேன் வண்ணங்கண்டேன்
மதிமுக அழகு கண்டேன்
தளிர் மென்கை விரல்கள் தநதி
தடவுதல் கண்ணிற் கண்டேன்
பிழிதருமியலைக் கண்டேன்
பேரியலிசையைக் கண்டேன்
ஒளிருவாளென்று மெங்கள
எழில் கலைச்செல்வி யம்மா

எழில் கலைச்செல்வி யிந்த
ஈழத்து நாட்டில் வாழும்
பழுதிலாத் தமிழர் செய்த
பயன் பழுத்ததுபோல் வந்து
முழு நிலா வாகத்தோன்றி
கோமைகளென்று சொன்ன
தெளிவிலார் தெளிந்து கொள்ளும்
படியினி உலகில் வாழ்வாள்.

உலகில்வாழ் தமிழரெங்கும
உயர்ந்ததாய் நாடுசேய்நா
டலகில் பல் பேதங்கூறி
அறிவிலார் போலப் பேசார்
கலைகளிற் சிறந்த செல்வி
கலைச்செல்வி யென்றுவாழ்த்தி
விலைமதிப் பற்ற செய்ய
மலரெனச் சூடிக்கொள்வார்.

இப்புதிய அம்சம் ஒவ்வொரு மாதமும் இடம்பெறும். புதுமையான, சுவையான செய்திகள் துணுக்குகளை வாசகர்களும் எழுதி அனுப்பலாம்.

தயாரிப்பு: **பாமா ராஜகோபால்**

# பலதும்

உலகத்தில்தோன்றி வாழ்ந்து மடிந்த அறிஞர்கள் பலர் பல விசித்திரமான பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தார்கள். அப்படித் தான் டாக்டர் ஜோன்சனும்! டாக்டர் ஜோன்சனை நடமாடும் அறிவுக்களஞ்சியம் என்பார்கள். இவர் ஆங்கிலத்திலே எவரது உதவியுமின்றி அகராதி ஒன்றை எழுதி எல்லோருடைய புகழையும் பெற்றவர். கட்டுரைகள் பல எழுதியிருக்கின்றார். அப்படிப்பட்ட அறிஞரான இவர் மாலை நேரங்களில் உலாவச் செல்லும்பொழுது தனது கைத்தடியையும் எடுத்துக்கொண்டு செல்வார். அப்பொழுது பாதையோரத்திலே இருக்கும் விளக்குக் கம்பங்களில் தனது கைத் தடியினால் ஒவ்வொரு தட்டுத் தட்டிவிட்டுச் செல்வாராம்.

படிகளில் ஏறும்பொழுதோ அல்லது இறங்கும்பொழுதோ தான் விரும்பிய காலையே முதலில்வைத்து நடப்பாராம். திடீரென்று கால்களைப் படிகளில் வைத்துவிட்டால், பழையபடி முன்னர் இருந்த இடத்திற்குவந்து தான்விரும்பிய காலை முதலில்வைத்து நடந்துசெல்வாராம்.

'ஆங்கிலச் சிறுகதை மன்னன்' என்று அழைக்கப்படும் ஈழத்து எழுத்தாளர் திரு அழகு சுப்பிரமணியம் ஒரு பரிஸ்டர். உலகத்தின் சிறுகதை எழுத்தாளர்களின் பெயர்களோடு இவரது பெயரும் அடிபடுகிறது. இவர் எழுதிய 'சிங்கப்பூர் பென்சனியர்' என்ற ஆங்கிலச் சிறுகதை பதின்மூன்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நாம் ஏதாவது பத்திரிகைக்கு இரண்டுமூன்று தடவைகள் விஷயங்கள் பிரசுரத்திற்கு அனுப்பியும் பிரசுரிக்கப்படாவிட்டால்

நாம் எழுதுவதில் ஒருவித வெறுப்புக்கொண்டுவிடுகிறோமல்லவா? ஆனல் இன்று நாம் எல்லாரும் போற்றும் எழுத்தாளர் 'பேனுட்ஷோ' முதல்முதலில் எழுதும்பொழுது எவைகளுமே பத்துவருடங்களுக்குப் பிரசுரமாகவில்லை. இதனுல் அவர் மனம் தளரவேயில்லை, தொடர்ந்து விடாப்பிடியாக எழுதினுர். வெற்றியும் கண்டார்.

❁ ❁ ❁ ❁


அச்சக வேலைகள் முடிவடையுந் தருணத்தில் புத்தகத்தை முழுமையாகப் பார்வையிட்ட அதன் தயாரிப்பாளர், அச்சுப் பிசாசை அகற்றிய மகிழ்ச்சியில் கீழ்க்கண்ட குறிப்பை எழுதிப் பெருமைப்பட்டுக்கொண்டார். இந்நூலில் "பிழை-திருத்தம்" என்ற பகுதி சேர்க்கப்படாமலிருப்பதே இதன் சிறப்புக்குச் சான்று.

❁ ❁ ❁ ❁

யாழ் இளம் எழுத்தாளர் சங்கம் தமது முதலாண்டு நிறைவுவிழாவை வண்ணை-வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சிறப்புற நடத்தினுர்களல்லவா? அன்று பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எழுத்தாளர் பலர் சொற்பொழிவு ஆற்றினுர்கள். அப்பொழுது, இன்று ஈழத்திலே பிரச்சனைக்குரிய எழுத்தாளராக இருக்கும் திரு. எஸ். பொன்னுத்துரையும் பேசினுர். பேசும் பொழுது எழுத்தாளர் நாவேந்தனைக் காரசாரமாகத் தாக்கிப் பேசினுர். அங்கிருந்த எழுத்தாளர்கள் சிலர், நாவேந்தனுக்கும் பொன்னுத்துரைக்குமிடையிலே பெரும் பிளவு இருப்பதாகக் கதைத்துக்கொண்டார்கள். ஆனல் — பொன்னுத்துரை பேசிமுடிந்ததும், மேடையை விட்டு இறங்கி நாவேந்தன் இருந்த இடத்திற்குச்சென்று அவருடன் சிரித்துச் சிரித்து மிகவும் அன்பாகக் கதைத்துக்கொண்டிருந்தார்.

எழுத்தாளர்களிடையே கருத்துவேற்றுமை இருப்பது வழக்கம்தானே! அதனுல் அவர்கள் உண்மையிலே பிளவுபட்டிருக்கிறுர்கள் என்று கூறுவது தவறல்லவா?

ப
த்
து
ம்




கே. . திசாநாயகா, நேரியகுளம்.

கே: பீலி வடியும் கண்ணே, ஊத்தைப் பல் அழகே, எண்ணெ வடியும் முகமே, என்று காதலன் தன் காதலியிடம் வர்ணித்தால் என்ன நடக்கும்?

ப: கண்ணாடி போன்ற என் முகத்தில் உங்கள் முகத்தையே காண்கின்றீர்களே என 'வெடுக்' கென்று கேட்டுவிட்டு, 'சடக்' கென்று எழுந்து நடப்பாள் அவள்!

ஆர். தம்பிராசா, மத்திய கல்லூரி மட்டக்களப்பு.

கே: யாழ்ப்பாணப் பெண்களை நம்ப வேண்டாம் என்று அவர்களை முடித்த கணவன்மார் சொல்கின்றார்கள். எனக்குக் கல்யாணம் பேசி யாழ்ப்பாணப் பெண் வீட்டார் வந்திருக்கின்றார்கள். நான் அவளை முடிப்பது நல்லதா? கூடாதா?.

ப: என்னைக்கேட்டு முடிவு செய்வதிலும் பார்க்க, பெண்ணைப் பார்த்து முடிவு செய்வதுதான் நல்லது, நீங்கள் குறிப்பிடும் அந்தக் கணவன்மார்களுக்குத் திருமணவயதை எட்டிய சகோதரிகள் இருக்கின்றார்களா என்பதைத் துப்பறிந்து கொள்வது மிக அவசியம்.

அ. ஜலால்தீன் எருக்கலம்பிட்டி.

கே: ஆணுக்குப் பெண் அவசியமா? அல்லது பெண்ணுக்கு ஆண் அவசியமா?

ப: ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அவசியம்.

உ. அலியர் சம்மாந்துறை.

கே: உலகத்திலுள்ள பொருள்களில் மிக அதிசயமான பொருள் எது?

ப: பெண்களின் கண்ணீர்!

எஸ். எம். அபூஹனிபா சின்னக் கிண்ணிய.

கே: தமது தாய் மொழி தமிழ் தான் என்பதை இன்றைய முஸ்லிம்கள் எல்லாரும் ஏகோபித்துச் சொல்கின்றார்கள், ஆனால் அரசாங்கக்கட்சி

யில் இருக்கும் இரு பிரதிநிதிகள் மட்டும் 'இல்லை' என்று மறுக்கின்றார்களே, காரணம் என்ன?

ப: அவர்கள் அரசாங்கக் கட்சியில் இருக்கின்றார்களே, அந்தக் காரணம் போதாதா?

இ. வசந்தத்தன், 5ம் குறுக்குத்தெரு கொழும்பு.

கே: ஸ்ரீமாவோவின் அரசியல் அறிவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்?

ப: "காலஞ்சென்ற என் கணவரின்..." என்று கசிந்து, கண்ணீர் மல்கக் கூறினால் இந்த நாட்டில் எதையும் சாதிக்கலாம் என்பதை அறியும் அளவுக்கு அரசியலறிவு படைத்தவர்!

"நல்லைக்குமரன்", 130, பேட்டுத் தெரு, கொழும்பு.

கே: காதல், கல்யாணம் ......... பின்னர்?

களிப்பு, கலகலப்பு, கரைச்சல், கஷ்டம், கசப்பு......!

இ. இராசசிங்கம், தும்பளை.

கே: ஒருவனுக்கு, படிப்பு, அறிவு, விவேகம், பணம், குணம்—இவற்றுள் எது முக்கியம்?

ப: தலைகீழாக வரிசைப்படுத்தியுள்ளீரே, நுனியிலிருந்து அடிக்கு வாரும்!

S. ஆறுமுகம், லியனகே ஸ்ரேட், கொழும்பு.

கே: கதாகாலக்ஷேபம், இசை, வயலின், மிருதங்கம் - ஆகிய துறைகளில் இன்று இலங்கையில் சிறந்து விளங்குபவர் யார்?

ப: இலங்கையைப் பொறுத்தவரை நாம் ஓர் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். இங்கே இசைக் கலைஞர்களின் தொகை குறைவு ஆனால்அவர்களிடையேவித்வத்காய்ச்சலும் போட்டியும் பொறாமையும் அதிகம். இந்த நிலையில், மதுரை மணி, ஜி. என். பி; எம். எஸ், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, பாலக்காட்டு மணி என்றெல்லாம் இந்தியாவில் குறிப்பிட்டுச் சொல்வதைப் போல், இங்கேயும் குறிப்பிட முடியுமா? சிறந்த கலை ஞானமும் திறமையுமுடைய ஒரு சிலர் இங்கே இருக்கத்தான் செய்கின்றார்கள், ஆனால் அவர்களுடைய திறமை, புலமை, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பரிபூரணமாக வெளிப்படுவதில்லை. ஆகவே, நீதிபதியின் நிலையிலிருந்து சிறந்தோர் எனக் குறிப்பிடாது, சாதாரண ரசிகன் என்ற நிலையில் எனக்குப் பிடித்

## பதில் வேண்டுமானால்...

என் முகவரியுள்ள பகுதியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பவேண்டும்.

புனைபெயரில் கேள்விகளை எழுதினாலும் சொந்தப் பெயரையும் முகவரியையும் தெரிவிக்கவேண்டும்.

பயனுள்ள, ஆபாசமற்ற, புதியகேள்விகளையேஅனுப்ப வேண்டும்.

கேள்விகள் சுருக்கமானதாக, ஆனால் தெளிவாக, மையினால் எழுதப்பட வேண்டும்.

— தாண்டவக்கோன்.

தவர்களைமட்டும் குறிப்பிடுகின்றேன். கதாகாலக்ஷேபம்: C. S. S. மணிபாகவதர்; இசை: ந. சண்முகரத்தினம், டி. எஸ். மணிபாகவதர்; ஐயாக் கண்ணுதேசிகர்; வயலின்: G. சண்முகானந்தம்; மிருதங்கம்: A.S. இராமநாதன், அ. கணேசசர்மா.

த. தருமசோதி, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

கே: "அவள் யார்" என்ற நாடகம் பார்த்தீர்களா? எப்படி?

ப: "அவள் யார்?" என்ற நாடகம் நடந்ததா? எங்கே?

K. இளையதம்பி, மகாறம்பக்குளம், வவுனியா.

கே: நீங்கள் எதற்காக, விலாசத்தை வெட்டி உறையில் ஒட்டிக் கேள்வியை அனுப்பச் சொல்கின்றீர்கள்?

ப பதிலளிப்பதற்காகத்தான்!

மு. ப. ஷஹாப்தீன், கொழும்பு -11

கே: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: நடிப்பில் முன்னணிக்கு வருவதற்கு இப்போது முயன்றுகொண்டிருக்கும் எம். ஜி. ஆர். நல்லவர்; ஈண்புள்ளம் கொண்டவர்; கொள்கைக்காக வாழ்பவர்; பிறர்க்குதவி செய்யும் பெருந்தன்மை படைத்தவர். ராமச்சந்திரனால் நடிகர்களுக்குப் பெருமை!

கே: நடிகர்களில் உங்களுக்குப் பிடித்தவர் யார்?

ப: சிவாஜி கணேஷன்தான்! காரணங்களைக் கூறவேண்டிய அவசியம் இல்லையே! இன்று உலகிலே தமிழ் நாட்டின் புகழை நிலைநாட்டி வருபவர்கள் மூவர்: ராஜாஜி, சிவாஜி. ஆர். கிருஷ்ணன்!

ஆர். கே. சாமி, பண்டாரவளை.

கே: கற்பை விலைபேசும் பெண்களும் "கலைச்செல்வி" படிக்கின்றார்களா?

ப: ஏன், கர்ப்பத்தடைக் கருவிகள் பற்றி விளம்பரம் செய்யப் போகின்றீரா?

ராஜம் புஷ்பவனம், உப்புவெளி திருக்கோணமலை

கே: கலைச்செல்வி நடாத்திய நாவல் போட்டியின் முடிவு என்ன அண்ணா?

ப: ஒரு சில விஷமிகள் கயிறு திரிப்பதைப் பார்த்து நீங்களும் சந்தேகம் கொண்டுவிட்டீர்களா? நாட்கள் பல கடந்துவிட்டன, உண்மைதான். ஆனாலும் முடிவுகள் இன்னும் தெரியவில்லை. ஈழநாட்டின் முதலாவது நாவல் போட்டிக்கு வந்த நாவல்களைக் கவனமாகவும் நுணுக்கமாகவும் பரிசீலனை செய்ய வேண்டாமா?

ஜீவமணி, மெதடிஸ்த மிஷன் பாடசாலை, சம்மாந்துறை.

கே: தலைவிதி, ஊழ்வினை என்றெல்லாம் சொல்கின்றார்கள். அத்தோடு விதியை மதியால் வெல்லலாம் என்றும் கூறுகின்றார்களே!

ப: தேர்வில் வெற்றிபெற விரும்புகின்றான் ஒருவன். விதியிருந்தால் வெற்றி கிடைக்கும் என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்தால் வெற்றி கிடைக்குமா? எல்லாவித முயற்சிகளையும் செய்ய வேண்டும். வெற்றி நிச்சயம் கிடைக்கும். ஆனால்

தற்செயலாக, இத்தனை முயற்சிகளுக்கும் பிறகு தோல்வியும் ஏற்படலாமல்லவா? அப்போது 'விதி' என்று சொல்லி ஆறுதலடைய வேண்டியதுதான். ''விதியை மதியால் வெல்லலாம்'' என்பது மக்களின் முயற்சியைத் தூண்டுவதற்காக ஏற்பட்டது. ஊழ்வினை, தலைவிதி—என்பவை மன ஆறுதலுக்காக ஏற்பட்டவை!

கே: காதலில் தோல்வி கண்ட காதலர்கள் கையாளும் சிறந்த முறை யாது?

ப: இழந்த காதலை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுவதைவிட, அதை மறந்து மறந்து மனதில் மகிழ்ச்சியை வரவழைப்பது சிறந்த முறை.

ச. கிரிவாசன் வெள்ளவத்தை.

கே: அழகு என்றால் என்னவோ?

ப: அதைச் சொன்னால் புரியுமோ? மனக்கண்ணால் காணும் கற்பனைக்கும் நிஜக் கண்ணால் காணும் உருவத்திற்குமிடையே உறவை ஏற்படுத்தும் நுண்ணிய நூலேணிதான் அழகு. ஆனால் அது மனிதனுக்கு மனிதன், இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் மாறுந் தன்மையுடையது.

கே: மனித வாழ்க்கையில் மிக இன்றியமையாததும், காசு கொடுத்தும் வாங்க முடியாததும் எது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?.

ப: உள்ளத்து மகிழ்ச்சி : மனத் திருப்தி!

பொ. சண்முநாதன், சங்குவேலி.

கே: ''கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' — ''அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்''— இடைக்காடரும் ஔவையாரும் பாடிய இந்த இரு குறள்களையும் பார்க்கும்போது, இருவரில் ஒருவர் மற்றவரைப் பார்த்து காப்பியடித்திருப்பதாகத் தெரிகிறதல்லவா?

ப: உருவத்தில் ஒரேமாதிரி இருந்தாலும் கருத்தில் கடலளவு வேறுபாடு தெரியவில்லையா?

''அறிஞன்,'' ஆயிலி, காரைநகர்.

கே: ''கலைச்செல்வி'' ஓவியர் ராஜாவும் ''கலைப்பொன்னி'' ஓவியர் ராஜாவும் ஒருவரா?

ப: ''கலைப்பொன்னி'' ஓவியர் ராஜா மதுரையில் வாழ்கின்றார் என்பதைத் தவிர வேறொன்றும் அவரைப் பற்றி எனக்குத் தெரியாது. ''கலைச் செல்வி'' ஓவியர் ராஜா அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். 'கலைச் செல்வி' அட்டையில் இவருடைய ஓவியங்கள் வெளிவரத் தொடங்கியதன் பின் வேறுசில நூலாசிரியர்களும் பத்திரிகையாசிரியர்களும் இவருக்கு ''சான்ஸ்'' கொடுத்து வருகின்றார்களே! அவரும் உங்களூரைச் சேர்ந்தவர்தான். ஆச்சரியப்படுகின்றீர்களா?

கே: நாடகங்களில் நடிக்கும் திறமை எனக்கிருக்கின்றது. நாடகத்தில் நடிப்பதற்குத் தாங்கள் சந்தர்ப்பம் வாங்கித் தருவீர்களா?

ப: மற்றவரின் சிபார்சிலும் பார்க்க, சொந்தத் திறமையை நிரூபித்து அதனால் முன்னேறுவது நல்லதல்லவா? யாழ்நகரிலே கலைவாணர் நாடக மன்றம், ஒறியன்ஸ் நுண் கலைக் கழகம், திருக்குறள் நாடக மன்றம் முதலிய சிறந்த நாடக

மன்றங்கள் இருக்கின்றன. நேரில் அவர்களிடம் சென்று உங்கள் நடிப்புத் திறமையைக் காட்டுங்கள். நடிப்பு நன்ருக இருந்தால் சந்தர்ப்பம் கொடுக்கத் தயங்கமாட்டார்கள் அவர்கள்.

எஸ். இராமநாதன், நல்லூர்.

கே: காலஞ்சென்ற வீணை சண்முகவடிவு அம்மாளின் கணவர் யார்?

ப: வக்கீலாக இருந்த பி. எஸ் சுப்பிரமணியம். இவர்களுடைய மகள் தான் கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலக்ஷ்மி!

கே: பத்தாவது தடவையாகக் கேட்கிறேன், உங்கள் பெயரென்ன?

ப: பத்தாவது தடவையாகச் சொல்கிறேன். என் பெயர் தாண்டவக்கோன்!

எஸ். ராஜேஸ்வரி, மெயின் வீதி' அட்டன்.

கே: 'குமுதத்'தில் சுவையான சினிமா விஷயங்களை எழுதுகின்ருரே, ஜாம்பவான், அவர் யார்?

ப: முன்பு "குண்டூசி" பத்திரிகையைச் சிறப்பாக நடாத்தினரே, பி. ஆர். எஸ். கோபால்! அவர் தான் இந்த ஜாம்பவான்!

கே: இலங்கையில் சினிமாப் படம் எடுத்தால், இந்தியாவில் ஓடாதா?

ப: இந்தியாவில் ஓடும். இந்தியாவிலிருந்தும் ஓடும்!

கே. கே. பெருமாள், செட்டியார் தெரு, கொழும்பு.

கே: அடுத்தமாதம் என் திருமணம் நடக்கவிருக்கின்றது. கோவிலில் தாலிகட்டுவதா, வீட்டில் தாலி கட்டுவதா நல்லது?

ப: உங்களுக்கு மனைவியாக வர விருப்பவளின் கழுத்தில் தாலி கட்டுவதுதான் நல்லது!

,'இலங்காநேசன்", மல்லாகம்.

கே: ஆண்டவன் ஆகாசத்தில் இருக்கின்ருனமே! சோவியத் விண்வெளிவீரர்கள் அவனைக் காணவில்லையே!

ப: உயிர் எங்கள் உடம்பில் இருக்கின்றதாமே! இதுவரை எந்தப் பெரிய டாக்டராவது அதைக் காணவில்லையே!

கா, பாஸ்கரன், அச்சுவேலி.

கே: இளம் பெண்ணொருத்தியின் வயதை எவ்வாறு அறியலாம்?

ப: இப்போது நடக்கும் ஆண்டிலிருந்து அவள் பிறந்த ஆண்டைக் கழித்து!

நீங்கள் வெட்டி, அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பவேண்டிய பகுதி இது:

---


**தாண்டவக்கோன்,**
மே-பா பாலன்வெளியீட்டு நிலையம்.
செட்டிகுளம். (இலங்கை)

---

இன்றே, இப்பொழுதே உங்கள்
சந்தாப் பணத்தைக்
"கலைச்செல்வி"க்கு அனுப்புங்கள்

# என்னைப்பற்றி......!

குமாரி சச்சு



பேபி சச்சுவாகச் சினிமாவில் புகுந்த என் சொந்தப்பெயர் பி. எஸ். சரஸ்வதி. சினிமா நட்சத்திரமாக மின்னும் மாடி லட்சுமி என் அக்கா. மற்றும் ராஜி, வசந்தி சித்ரா ஆகியோர் என சகோதரிகள். என் மாமா அவர்கள் மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

நடிப்புத்துறையில் ஈடுபட்டபின் ஓய்வு என்பதே கிடைப்பதாயில்லை. வீட்டில் இருக்கும் நேரங்களில் புதிதாக ஏதாவது நடனம் பழகிக்கொள்வேன். அப்போது பத்திரிகைக்காரர்கள் பேட்டி காணவும் படமெடுக்கவும் வருவார்கள்.

எனக்கு அண்ணாத்துரை அவர்களைக்கண்டால் மிகவும் பிடிக்கும். பேச்சிலே நாவலர் நெடுஞ்செழியன் பேசினால் எனக்கும் எனது சகோதரிக்கும் மிகவும் பிடிக்கும். அண்ணா அவர்கள் தோல்வி அடைந்துவிட்டார் என்றதும நான் அழுதேன். எனக்கு மனமே சரியில்லாமல் போய்விட்டது. பிறகு மனோகரன் அவர்கள் M. P. ஆக வந்ததும் மனம் கொஞ்சம் சந்தோஷம் அடைந்தது.

அழகு தவழும் இலங்கையைப்பற்றியும் அங்குள்ள ரஸிகர்களைப்பற்றியும் நிறையக் கேள்விப்பட்டுள்ளேன். அவர்களை நேரில்பார்த்து மகிழும்நாள் எந்நாளோ?



# நல்லதும் கெட்டதும்

யாழ் ஓறியன்ஸ் கழகம்

சென்ற 4-8-62 சனிக்கிழமை மாலை ஓறியன்ஸ் விளையாட்டு வளர்ச்சி நுண்கலைச் சங்கத்தினரின் 21வது ஆண்டுவிழா யாழ் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது அச்சங்க அங்கத்தினரால் இச் சமூகநாடகம் அரங்கேற்றப்பட்டது. கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் இயங்கும் இவர்களின் நடிப்புத் திறமையைச் சொல்லவும் வேண்டுமா?

பிறர் பணத்தைத் திருடிக் காலங்கழிப்பவன் மோகன், ஒன்றுமறியா அப்பாவி இராஜேந்திரன் விதியின் விளையாட்டாலும் மோகனின் நட்பினாலும் திருடன் என்ற பட்டத்துடன் சிறை செல்கின்றான். ஆனால் சிறைசென்ற ராஜேந்திரனால் மோகன் நல்லவனாக மாறுகின்றான். இவற்றுடன் சூரி- பாபு போன்றவர்களின் சூழ்ச்சிகள்சேர, கதை ஓடுகின்றது.

நாடகம் தொடங்க, சுமார் அரைமணி நேரத்திற்கு முன்னரே நடிகர்கள் தங்கள் கடமையை உணர்ந்து கதாபாத்திரங்களாக மாறி உணர்ச்சி ததும்ப நடித்தமை எல்லோர் மனத்தையும் கவர்ந்தது. பாபுவாக நடித்த திரு. செல்வரத்தினத்தின்

நடிப்பு, பலே! "ஈழத்து நடிகர்கள் எந்தநாட்டு நடிகர்களுக்கும் குறைந்தவர்களல்ல" என்பதை எடுத்துக்காட்டுவதுபோல் அவர்நடிப்பு இருந்தது. மோகனாகத் தோன்றிய திரு. இரகுநாதனின் நடிப்பு மிகத்திறம். அவருக்கு மேற்படி கழகத்தினர் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்தமை மிகப் பொருத்தமே. சேகராக வந்த திரு.சண்முகலிங்கம் தன் பாத்திரத்தை உணர்ந்து நடித்தார். ஆனால் அழவேண்டிய கட்டங்களில் கண்ணீர்விட மறந்துவிட்டாரே!


நாடக ஆரம்பத்தில் சேகர்பாட, சுசீலா நடனமாடுகின்றார். நடனமா அது? சுசீலாவாக நடித்த மகேஸ்வரன் இன்னும் சிறிது முயற்சி எடுத்திருக்கவேண்டும். இராஜேந்திரன் சிறையிலிருக்கும்போது வேறொரு கைதியைக் கொணர்ந்து அவர் மூலம் நகைச்சுவையைப் புகுத்த முயன்றிருக்கிறார் கதாசிரியர். ஆனால் அந்தக் கைதியின் "அரோஹரா" அலுத்துவிட்டதே. பீட்டர் என்ற பெயருடன் பொலிஸ்காரராக நடித்தார் ஒருவர். அசல் தோட்டியைப்போலிருந்தது உடையும் "மேக் அப்"பும்! சேகரின் தாய் நோய்வாய்ப்பட்டிருப்பதையோ, அவர் இறப்பதையோ காட்டாது, "என் தாய் இறந்துவிட்டார்" என்பதைச் சேகரின் உரையாடலில் சாதாரணமாகக் கலந்துவிட்டது ரசிகர்கள் பலரைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அம்மன் கோவிலில் தேவியின் படத்திற்குப் பதிலாக மஹா விஷ்ணுவின் படத்தை வைத்ததும் கோவிலுக்குச் செல்லும்போதே உடைத்த தேங்காயைத் தட்டில் கொண்டுபோவதும் இக்கால நாகரிகமோ? சிறு குறைகள்தான். ஆனால் 'பளிச்'என்று தெரிகின்றதே!

குறைகளை நீக்கி, தமிழ் மக்கள் வதியும் இடங்களில் மீண்டும் அரங்கேற்றினால் பாராட்டுப் பெருகும்.

— பாலு

கலை நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனம் "கலைச் செல்வி"யில் வெளிவரவேண்டும் என விரும்புபவர்கள்

நிகழ்ச்சி பற்றிய அறிவித்தலையும் இரண்டு நுழைவுச் சீட்டுகளையும் முன்னதாகவே எமக்கு அனுப்பவேண்டும். —ஆசிரியர்



# நெஞ்சில் ஓர் ஆலயம்.

'ஸ்டார்ஸ் புரடக்ஷன்ஸ்,

சினிமாக் கதையான ஸ்ரீதரின் நெஞ்சில் ஓர் ஆலயத்தை மேடைச் சித்திரமாக மாற்றி சென்ற மாதம் 18ம் திகதி ஸ்டார்ஸ் புரடக்ஷன்ஸ் சினர் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்திலே, அரங்கேற்றினுர்கள்.

அரங்கேற்றுவதில் ஏனே இந்த அவசரம்? நடிகர்கள் பேசவேண்டியதை மறந்து பேதலிப்பதும், காட்சிகள் தொடர்ச்சியாக வரமறுப்பதும் கனியமுன் படைத்த காரணத்தால் தான்!

ஒரு இலட்சிய டாக்டரையும், ஒரு நோயாளியையும் அவன் மனைவியையும் பின்னணியாக வைத்துப் பின்னப்பட்ட கதை என்ருலும், வழக்கமான முக்கோணக் காதலைத்தான் இங்கு காண்கிருேம். ஒரு டாக்டர் தன்னுடைய மாஜிக்காதலியின் கணவனுக்கு சிகிச்சை செய்வதில் என்ன புதுமை? ஒரு சிறு புதுமை. நோயாளி, தான் இறந்துவிட்டால் தன் மனைவியை மறுதாரமாக ஏற்கும்படி டாக்டரை வேண்டுவது!

இழந்த காதலையும், தியாகத்தையும் தூணுக வைத்து எழுப்பிய நாடகங்கள், நடிகர்களுக்கோர் நல்

லேணி. அந்தவகையைச் சேர்ந்ததுதான் இந்நாடகம். தன்பாத்திரம் தந்த சந்தர்ப்பத்தையும், தன் கலைமதியையும் கலந்து அனுபவ நடிகர், நடிகமணி எஸ். ரி. அரசு மீண்டும் தான் ஈழத்தின் தலையாய நடிகர் என்பதை நிரூபிக்கிறார். ஒருவனைக் காதலித்து இன்னுமொருவனை மணம்புரியும் பெண் தன் கணவனுடன் நெறிதவறாமல் வாழமுடியுமா, முடியாதா? என்று வேணுவுக்கும், அவன் மனைவி சீதாவுக்கும் வாதம். முடியாது என்கிறான் வேணு. முடியும்என்கிறான் சீதா. இந்த இடத்தில் வேணுவாக நடித்த நடிகமணி எஸ். ரி. அரசுவும் சீதாவாக நடித்த மகாலக்ஷ்மியும் நடிப்பின் எல்லைக்கே போய்விடுகிறார்கள்.

டாக்டர் முரளியாக வந்த ரகுநாதன் கடைமையே உருவான இந்தப் பாத்திரத்தின் நெளிவு சுளிவுகளைச் சில இடங்களில் தவற விட்டு விடுகின்றார். சொல்ல முடியாத சோகத்தால் உந்தப்பட்ட அவர் குலுங்கிக் குலுங்கி அழும் கட்டங்கள் 'போர்' அடிக்கின்றன.

இந்த நாடகத்தில்ஹாஸ்யம் என்று சொல்லிச் சிலகாட்சிகளைச் சேர்த்திருக்கின்றார்கள். அதில் மிளிரும் ஹாஸ்யச் சுவையை டாக்டர் முரளியிடம் இருக்கும் பூதக்கண்ணாடியின் கீழ்த்தான் பார்க்கலாம், இந்தக் காட்சிகள் முழுநாடகத்தின் 'டெம்போ'வைக் கெடுத்து விடுகின்றன. எல்லா விதத்திலும் குற்றமற்ற 'டைரக்ஷ'னுக்கு இது பெரும் குறை.


ஒரு சந்தேகம்: சுவாசப்பை புற்றுநோய்க்கும், காசநோய் இருமலுக்கும்என்ன தொடர்பு? வேணு நாடகம் முழுவதும் 'லொட், லொட்' என்று இருமித் தொலைக்கிறார். இது ரசிகர்களின் இரக்கத்தைப் பெறுவதற்காக இருக்கலாம்; ஆனால் உண்மைக்கு உட்பட்டதாய் இருக்கக் கூடாதா?

நாடகம் முடிந்ததும்—நோயாளி வேணுமட்டும் நெஞ்சில் நிற்கிறார்!

—பாமா ராஜகோபால்.


யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்தமுறையில்

**படம் பிறேம் போடுபவர்கள்**



ஜன்னல்களுக்குத் தேவையான
சித்திர வேலைப்பாடுடைய
**கண்ணாடி வகைகள்**
மேசைக்கேற்ற
கண்ணாடிகள்
தேசத் தலைவர்கள்
சினிமா நட்சத்திரங்கள்
சுவாமி படங்கள்

**கண்ணாடி ஓடுகள்**

அனைத்தும் கிடைக்கும்

**ஜஸீமா பிக்சர் பலஸ்**

222, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.







# வவுனியாவில்

## தமிழ்ச்

சென்ற 3-8-62-ல் வவுனியாவில் நடைபெற்ற கலைச்செல்வியின் முதலாவது கலைவிழா, கலைச்செல்வியின் சரித்திரத்திலும் வவுனியாவின் சரித்திரத்திலும் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்படவேண்டிய மிக முக்கியமான நிகழ்ச்சி.

கலைச்செல்வியின் நான்குவருட வளர்ச்சியில் அவளின் சார்பில் முதல் முதலில் நடைபெற்ற விழா இது. வவுனியாவின் இன்றைய சரித்திரத்தில் முதல்முதலில் முத்தமிழ் நிகழ்ச்சிகள் அடங்கிய கலைவிழாவும் இது. தான்.

### வன்னிநாட்டுக் கலைமன்றம்

எந்த ஒரு பொதுப்பணியையும் தனிப்பட்ட நபரினால் செய்யமுடியாது. கலை கலாச்சார வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான வவுனியாப் பகுதியில் எந்தவித மன்றங்களும் செயலாற்றுவது கிடையாது. எனவே மக்களனைவரையும் ஒன்றுகூட்டி ஓர் கலைமன்றம் நிறுவும் பணியில் அப்பகுதிப் பெரியார்கள் முயற்சி எடுத்தனர். கலைச்செல்வியின் முதலாவது கலைவிழா வவுனியாவில் நடைபெற்ற ஞாபகர்த்தமாக. வவுனியா

---

1. பட்டினசபைத் தலைவர் திரு சுப்பிரமணியம் வரவேற்புரை.
2. பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் தொடக்கவுரை,
3. செல்வி புஷ்பா செல்வநாயகம் சொற்பொழிவு.

# கலைவிழா

## செல்வன்



வில் கலைவளர்க்கும் கலைமன்றம் ஒன்றை கலைவிழா நடைபெற்ற நாட்காலை நிறுவியுள்ளனர்! இந்த அரிய முயற்சியில் தீவிரமாகப் பாடுபட்ட திருவாளர்கள் நீ. அந்தோனிப்பிள்ளை, தீ. முருகேசம்பிள்ளை, பட்டினசபைத் தலைவர் ச. சுப்பிரமணியம் போன்ற பெரியார்கள் மக்களின் பாராட்டுதலுக்குரித்தானவர்கள்.



### வன்னிநாட்டின் தமிழ் ஏடு

வன்னித் தமிழ்நாட்டில் ஆயிரக் கணக்கான தமிழ் ஏடுகள் தேடுவாரற்றுச் செல்லரித்துச் சீரழிந்து போய்க் கிடக்கின்றன. இப்படிச் சீரழியும் தமிழ் ஏடுகளுக்கும் கலைச்செல்வி கலைவிழாமூலம் நல்லகாலம் பிறந்துள்ளது என்றே கூறவேண்டும்.

கலைவிழாவைச் சிறப்புற நடாத்துவதற்குக் கலைவிழாக் குழுவினர் அயராது உழைத்தார்கள். விழாவிற்கு

---

1. பாடசாலைகளின் கதம்ப நிகழ்ச்சியில் ஒரு நடனம்.

2. 'ஈழநாடு' திரு. ஹரன் 'கலைச்செல்வி' மலரை வெளியிடுகின்ரூர்.

3. ஊர்வலத்தில் மாணவிகள்.



முதல்நாள் சமாளிக்கமுடியாத ஒரு பிரச்சினை எழுந்தது. ஊர்வலத்தில் எடுத்துச்செல்வதற்குத் தமிழ் ஏடுகள் இல்லையே? "இப்பிரச்சனையை நாம் பெரிதாகக் கருதத் தேவையில்லை. எம்மிடத்தில் எத்தனையோ ஏடுகள் இருக்கின்றன" என்று பட்டின சபைத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம் கூறியதும் கலைவிழாக் குழுவினர் ஆச்சரியப்பட்டனர். வன்னிநாட்டில் சீரழிந்துபோகும் தமிழ் ஏடுகள்பற்றிக் கவலையுடன் கூறிய தலைவர் தன்னிடமிருக்கும் தமிழ் ஏடு ஒன்றினைத் தருவதாகக் கூறினர். இதனைத் தொடர்ந்து வவுனியாவில் நிறுவப் பெற்றுள்ள கலைமன்றத்தில் வன்னி நாட்டிற் சீரழியும் தமிழ் ஏடுகள் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் பற்றிப் பலரும் வற்புறுத்தினர்.

## ஊர்வல ஆரம்பம்

தம் இல்லங்களையும் கடைகளையும் அலங்கரித்துத் தமிழ் அன்னைக்கு வணக்கம் செலுத்தக் காலைமுதல் காத்திருந்த பொதுமக்கள், கலைவிழா நிகழ்ச்சிகளின் தாமதத்தால் சற்றும் பாதிக்கப்படவில்லை.

பிற்பகல் இரண்டுமணிக்கு ஆரம்பமாகவேண்டிய ஊர்வலம் இரு மணிநேரம் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டது. ஊர்வலம் வவுனியா மகாவித்தியாலயத்திலிருந்து புறப்பட ஏற்பாடாகிக்கொண்டிருந்தது பாடசாலை மாணவ மாணவிகள் அணி வகுத்தும், பொதுமக்கள் நூற்றுக் கணக்கிலல்ல ஆயிரக்கணக்கில் குழுமியும் நின்றனர். சின்னப்பழனி செற்றின் மேளக்கச்சேரி ஊர்வலத்திற்கு உணர்ச்சியூட்டுவதாக இருந்தது. நன்கு அலங்கரிக்கப்பெற்ற மாட்டுவண்டி தமிழ் ஏட்டை எடுத்துச் செல்லுவதற்காக அவ்விடத்தை வந்தடைந்தது. வவுனியா தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள் ஏட்டைத் தன் தலையில் பயபக்தியுடன் எடுத்துச் சுமந்துசென்று வண்டியிலமைக்கப் பெற்றிருந்த பீடத்தில்வைத்து மலர் மாலையிட்டு வணங்கிநின்று ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தகாட்சி மக்களைப் பெரிதும் கவர்ந்தது. வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. தா. சிவசிதம்பரம் பட்டினசபைத் தலைவர் திரு.சு. சுப்பிரமணியம் முதலியோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஊர்வலத்தில் மக்கள்கூட்ட அதிகரிப்பினுல் இடையிடையே போக்குவரத்துக்கள் தடைப்பட்டுச் செல்லவேண்டியிருந்தது. மாலை ஆறுமணியளவில் வவுனியாப் பட்டினசபை முன்றிலை வந்தடைந்தது இம்மாபெரும் ஊர்வலம்.

## இடம் போதவில்லை

வவுனியாப் பட்டினசபை மண்டபத்தில் சுமார் இரண்டாயிரம் மக்கள் அமர்ந்துகொள்ளமுடியும். விழாவை மண்டபத்தினுள்ளே நடாத்துவதே சிறந்தது எனக் கருதியிருந்தனர் விழாக்குழுவினர். விழா ஆரம்பமாவதற்கு எத்தனையோ மணிநேரம் முன்னதாகவே மண்டபம் பெண்களால்மட்டும் நிறைந்துவிட்டது. ஊர்வலத்தில் வந்த மக்கள் மண்டபத்தினுள் செல்லமுடியாது கஷ்டப்பட்டனர், பல பாடசாலை மாணவிகள் கலைச்செல்வி கலைவிழா கதம்பப் போட்டியில் பங்குபற்றுவதற்காகக் காத்திருந்தனர். பிள்ளைகளின் திற

மையைக் கண்டு களிப்புறப் பெற்றோர் கூட்டம் சொல்லமுடியாதளவில் குழுமி நின்றனர். நிலைமையைச் சமாளிப்பதற்காக மண்டபத்திற்கு வெளியே, திறந்த வெளியரங்கு அமைத்து விழாவை நடாத்தவேண்டியநிலை ஏற்பட்டது.

## மூலைக்குமூலை வாத்திய ஓசைகள்

பல பாடசாலைகள் கதம்பப் போட்டியில் பங்குபற்றுவதற்காகத் தமது மாணவிகளைத் தயார்செய்துகொண்டிருந்தனர். மண்டபத்தின் ஒவ்வோர் மூலையிலுமுள்ள அறைகளில் மாணவிகள் உடுப்புகள் மாற்றிக்கொண்டும் கால்களில் சலங்கைகள் கட்டிக்கொண்டும்அங்குமிங்கும் ஓடித்திரிய அதனால் கிளம்பும் ஓசைகள் ரசிகர் கூட்டத்தின் ஆர்வத்தை மேலும் கூட்டிக்கொண்டே இருந்தது. விழா தொடங்கமுன் சின்னப்பழனி செற்றின் மேளக்கச்சேரி நடைபெற்றது. போலிசாரின் உதவியின்றி மக்களை ஆங்காங்கு அமரச்செய்யும் பணியில் திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வெற்றி கண்டார்.

## கொடியேற்றம்

விழாத் தொடங்கமுன் கலைச்செல்வியின கொடியை வவுனியாத் தமிழ்ப்பிரிவுக் காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள்ஏற்றி வைத்தார்கள். அவ்வமயம் கூடி நின்ற மக்கள் ''கலைச்செல்வி வாழ்க'' என்று கோஷமிட்டனர். இதைத் தொடர்ந்து பட்டினசபைத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம்அவர்கள் அனைவரையும் வரவேற்றுச் சொற்பொழிவாற்றினர். இதன்பின் வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் விழாவைத் தொடக்கிவைத்துக் கலையுணர்ச்சியுடன் சொற்பெருக்காற்றினர். கலைச்செல்வியின் சரித்திரத்தில் இடம்பெறவேண்டிய இக்கலை விழாவுக்கு நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. வைத்திலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர்கள். அவரது இலக்கியத்தரமான சொற்பெருக்கு கலைவிழாவுக்குத்தனிச் சிறப்பைக் கொடுத்தது.

## பாடசாலை மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகள்

வவுனியாப் பகுதியில் உள்ள பல பாடசாலைகள் கதம்ப நிகழ்ச்சிப் போட்டியில் கலந்துகொள்ள முன்வந்தன ஆனல் திறமை காரணமாகக் கீழ்க்காணும் பாடசாலைகட்கே பங்கு பற்ற வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

வவுனியா மகா வித்தியாலயம் வவுனியா பூந்தோட்டம் அ. த. கலவன்பாடசாலை, வவுனியா சைவப் பிரகாச வித்தியாலயம், வவுனியா நடனப் பாடசாலை, கோவில் புதுக்குளம் பாடசாலை, வவுனியா R. C. பாடசாலை:

இப்பாடசாலைகள் எல்லாவற்றினதும் மாணவிகள் சிறப்பாகத் தம் கலைத்திறமையை காட்டியபோதும் வவுனியா மகாவித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம், வவுனியா R. C. பாடசாலை ஆகியனவே பரிசுகள் பெற்றன, மற்றைய பாடசாலைகள் பரிசுகள் பெருவிட்டாலும் மக்களின் பாராட்டுதலைப் பெற்றுர்கள்.

இந் நிகழ்ச்சிகளை மிக ஆர்வத்தோடு பார்த்திருந்த வவுனியா மா

வட்ட அதிகாரி ஜனுப்முன்ஷின் அவர்களும், வவுனியா நீதிபதி திரு இராசதுரை அவர்களும் சிறுவர்களின் கலைத்திறனைப் பாராட்டினுர்கள்.

## மலர் வெளியீடு

கலைச்செல்வியின் கலைவிழா விசேடமலரை ஈழநாடு ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் அவர்கள் வெளியிட்டு கலைச்செல்வியின் சேவையைப் பாராட்டினுர்கள். "யாழ்ப்பாணத்தில் பிறந்த கலைச்செல்விக்கு வன்னிநாட்டில் திருமணம்" என்று அவர் கூறியதும் மக்கள் கரகோஷம் செய்தனர். இதன்பின் செல்வி புஷ்பா செல்வநாயகம் திரு. மகாதேவன் ஆகியோரின் அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன.

## கலைஞர் கௌரவிக்கப்பட்டார்

கலைக்காகத் தன் வாழ்க்கையையே தியாகம் செய்து கலைத்தொண்டாற்றிவரும் கலைஞர் ஏ. சுப்பையா அவர்களுக்கு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் கலைச்செல்வி சார்பில் பொன்னுடை போர்த்துக் கௌரவித்தார். அத்துடன் "கலைச்செல்வன்" என்றகௌரவப்பட்டமும் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொக்குவில் கலாபவன மாணவிகளின் பரத நாட்டியக் கச்சேரியும் நடைபெற்றது கலாபவன மாணவிகள் வயசில் சிறியவர்களானுலும் கலையில் முதிர்ச்சியடைந்தவர்களென்றேகூறவேண்டும் அவர்கள் தம்திறமையைக் கொண்டு சபையோரின் மதிப்பைப்பெற்றுர்கள்.

கலைவிழாவின் வெற்றிக்காக இன்னிசை விருந்தளிக்க யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு வந்திருந்த இலங்கை அண்ணமலை இசைத்தமிழ் மன்ற செயலாளர் திரு. நமசிவாயம் அவர்களையும் கோஷ்டியினரையும் போற்றுமலிருக்க முடியாது. சுயநலம் கருதாது பொதுச் சேவைக்கே தம்மைத் தியாகம் செய்துள்ள கலைஞர்களை வவுனியா மக்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள்.

விழாவின் முடிவில் அரியாலை நாடகமன்றத்தினர் ராஜராஜசோழன் நாடகத்தை திறம்பட நடித்துக் காண்பித்து விழாவின் முடிவையும் சிறப்பித்தனர்,

## நேயர்களுக்கு

புதிய சந்தாதாரர் பலரைச் சேர்த்துதவுதற்கு அன்பர்கள் பலர் தாமாகவே முன்வந்துள்ளார்கள். அவர்களுடைய வேண்டுகோளின்படி, நவம்பர் 30ந் திகதி வரை சந்தாதாரராகச் சேர்ப்வர்களையும் தென் இந்திய சுற்றுப்பிரயாணத் திட்டத்தில் சேர்ப்பதென முடிவு செய்துள்ளோம்.

-- நிர்வாகிகள்.

# ஆயிரம் ரூபா : நாவல் போட்டி

"கலைச்செல்வி" நாவல் போட்டி முடிவைப் பற்றி, போட்டியில் பங்கு பற்றிய எழுத்தாளர் களும் வாசக நேயர்களும் கேட்டுள்ளார்கள். "கலைச்செல்வி" ஆசிரியர் குழுவினரின் பூர் வாங்க பரிசீலனையின்பின், பத்து நாவல்கள் தெரிவு செய்யப்பட்டு நீதிபதிகளுக்கு அனுப் பப்பட்டுள்ளன. இலங்கையில் நடாத்தப்படும் முதலாவது நாவல் போட்டி இது. ஆயிரம் ரூபா வைப் பரிசாகக் கொடுக்கப் போகின்றோம். நாவல்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்து விட்டுப் பரிசைக் கொடுக்கலாமா? வேறு பல பொறுப்புகளை உடைய கீழ்க்கண்டவர்கள் நீதி பதிகளாகப் பணியாற்றுகின்றார்கள்.

திரு. இராஜ. அரியரத்தினம்,

(ஆசிரியர், ஈழநாடு, யாழ்ப்பாணம்.)

திரு. S. T. சிவநாயகம்,

(நிர்வாக ஆசிரியர், வீரகேசரி, கொழும்பு.

திரு. அகிலன், சென்னை.

திரு. க. கைலாஸபதி.

(விரிவுரையாளர், பல்கலைக் கழகம், பேராதனை

ஆசிரியர், கலைச்செல்வி.

ஆகவே பொறுத்திருப்போம். சரியான தீர்ப்பு வரும்வரை பொறுத்திருப்போம்.

## அட்டைப் படம்

கம்பராமாயணத்தில் சூர்ப்பனகை வரும் காட்சி. யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ரூடியோவினர் 'புளக்' உதவியுள்ளார்கள்.

## பரிசுக் கதைகள்

பரிசு பெற்ற மூன்று சிறு கதைகளும் ஐப்பசி இதழில் வெளியாகின்றன. கார்த்திகை இதழ் தீபாவளிமலராக வெளியாகின்றது.

பாலன் வெளியீட்டு நிலையம்
செட்டிகுளம்.

# திரைக்கு வரமுன்........!

குகஜி.

'நடிகர்திலகம்' சிவாஜி கணேசன் நடித்துப் படமாக்கப்பட்ட ராஜாமணி பிக்சர்ஸாரின் இரண்டாவது படத்தில் சில காட்சிகளை அண்மையில் நான் பார்த்தேன். இந்தக் காட்சிகளில் ஒன்றைப் பார்த்த நான் உண்மையிலேயே அழுதுவிட்டேன். இதுவரை நான் எந்தத் தமிழ் படத்தையும் பார்த்து அழுததே கிடையாது.

இந்தக்காட்சியில் சிவாஜி கணேசன் தன் தாயாராக நடிக்கும் எம். வி. ராஜம்மாவைப்பார்த்து பேசும் சில வசனங்கள் பிரமாதம். வெளிநாட்டிலிருந்து வீடுதிரும்பிய கணேசனின் முன்னால் குனிந்த தலை நிமிராமல் எம். வி. ராஜம்மா நிற்கிறார். அவரோடு சம்பாஷித்த கணேசன், தன் தாய். அதிகம் பேசாமல் நிற்பதைப் பார்த்து தாயின் தலையை நிமிர்த்துகிறார், உடனே கணேசனின் முகத்தில் பெரியதோர் மாற்றம், "அம்மா! உன் மஞ்சள் எங்கே? குங்குமம் எங்கே? பூ எங்கே? தாலி எங்கே?" என்று கதறுகிறார். இந்தக் காட்சி, படத்தில் தொடக்கமாகக் காட்டப்பட இருப்பதாக அதன் டைரெக்டர்களான கிருஷ்ணன் – பஞ்சு கூறினார்கள். இந்தக் காட்சி படமாக்கப்பட்ட பொழுது கலைக்குரிசில் கணேசன் உணர்ச்சி வசப்பட்டு கண்ணாடியில் கையை மோதிவிட்டார். அதனால் கண்ணாடி வெட்டி கையில் இரத்தம் வடிந்தது. இவ்வளவு அரும்பாடுபட்ட படமாக்கப்பட்ட இத்தக் காட்சியைத் திரையில் பார்ப்பவர்கள் கட்டாயம் அழுதே தீருவர்.

—:—

பிரபுராம் பிலிம்ஸார் தமிழ் 'பாசமலரை' இந்தியில் 'ராக்கி' என்ற பெயரில் படமாக்கி வருகிறார்கள். அதில் சிவாஜிகணேசன் நடித்த பாகத்தை பழம்பெரும் நடிகர் அசோக்குமார் நடித்து வருவது ரசிகர்கள் அறிந்ததே, எப்படித்தான் அசோக்குமார் அந்தப் பாகத்தைச் செய்து முடிப்பாரோ என்று சினிமா வட்டாரத்தில் அதிசயப்பட்டனர். அக்காட்சிகளில் பல படமாக்கப்பட்டுவிட்டன. உச்சக்கட்டங்களில் அசோககுமார் சிவாஜியையும் நடிப்பில் மிஞ்சிவிட்டார் படத்தைப் பார்த்த கணேசனே இதை ஒப்புக் கொண்டார்

இச் செய்தி சிவாஜி ரசிகர்களுக்கு ஒரு ஆச்சரியமான செய்தியாக இருக்கலாம். ஆனால் உண்மை. இருப்பினும் நமது நடிகர்திலகம் போல் நவரசங்களிலும் தன்னால் சோபிக்க முடியாதென்பதை அசோக்குமாரே கூறியுள்ளார் – இதுவும் உண்மை.

—:—

எஸ். பாலச்சந்தரின் 'அவனா இவன்' படம் முடிந்து தணிக்கையாகியும் விட்டது. மிகக் குறைந்த செலவில் தயாரான இப்படத்தில் பாகங்கள் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாலே நாலு பாட்டுக்கள் தான் இப்படத்தில் வருகின்றன. படம் தொடங்கியவுடனேயே படத்தின் பெயர், நடிகர் பட்டியல் ஆகியன காட்டப்படவில்லை. படம் ஓடி, ஒரு திருமணக் காட்சியில் அமர்ந்திருக்கும் மாப்பிள்ளையை (எஸ். பாலச்சந்தர்), பேபி பத்மினி (மணப்பெண்ணின் தங்கை) பார்த்து 'அவனா இவன்' என்று பல முறை கத்துகிறார். அந்த உச்சக் கட்டத்தில் தான் படத்தின் பெயர், நடிகர் பட்டியல் ஆகியன காட்டப்படுகின்றன. அத்துடன் இடைவேளை விடப்படுகிறது. கதையில் புதுமையில்லை. இருப்பினும் நல்லமுறையில் கையாளப்பட்டிருக்கிறது.

—:—